www.tamilarangam.net

# சுவடுகள்



## மாநகர, மாகாணசபைத் தேர்தல்
## நோர்வே அரசியல்க்
## கட்சிகளுடன் ஒரு பேட்டி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**SUVADUGAL,**
**A Tamil monthly from Norway**
Estd: Sept'1988

**Bank account**: 16075213062
SparebankenNOR

ISSN: 0804 - 5712

**Editorial Group**: Thuruvapalagar

Price: 25NKr
Subscription: 300NKr/ 12 issues

**Published by**:
Norway Tamil Culturel Centre
**Address:**
Suvadugal,
Herslebs gt43,
0578 Oslo,
NORWAY

**சுவடுகள்,**
**தமிழ் மாத இதழ்**
ஸ்தாபிதம்: புரட்டாதி'1988

வங்கிக் கணக்கிலக்கம்: 16075213062
ஸ்பாரபாங்கன் நூர்

ஆசிரியர் குழு:
துருவபாலகர்

தனிப்பிரதி விலை: 25 குறோணர்கள்
சந்தா:
பன்னிரு இதழ்களுக்கு 300 குறோணர்கள்

வெளியீடு:
நோர்வே தமிழ்க் கலாசார மையம்
முகவரி:
சுவடுகள்,
ஹேர்சிலப்ஸ் காதா 43,
0578 ஒஸ்லோ,
நோர்வே.

**சுவடுகள்** 68

ஆனி 1995

நிறுவியது: புரட்டாதி 1988

இந்த இதழில்

ஆடி 1995

எழுத்தாளர் கணேசலிங்கத்துடன் ஒரு பேட்டி.......
தேசத்தின் குறிப்புகள்.....................11
கோட்பாடு பற்றிய பிரச்சனைகள்............115
தமிழகப் பார்ப்பனியம்...................21
ஜேர்மனியில் மீண்டும் நாஸிசம்..............28
இருவர்.............................39
புகைப்படக் கலை......................44
நீறுபூத்த நெருப்பு......................50

அடுத்த இதழில்:

'மண் மனம்' தொடர்
சிவசேகரத்தின் மதச் சுதந்திரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாநகர, மாகாண சபைத் தேர்தல் நோர்வே அரசியல்க் கட்சிகளுடன் ஒரு பேட்டி

புரட்டாதி மாதம் 11ம் திகதி நடைபெறவுள்ள நோர்வேயின் மாநகர, மாகாணத் தேர்தல்களை முன்னிட்டு இந்நாட்டில் உள்ள முக்கிய அரசியல் கட்சிகளிடம் சிறு பேட்டி ஒன்று சுவடுகள் சஞ்சிகை சார்பாக மேற்கொள்ளப் பட்டது. வெளிநாட்டவர் விடயத்தில் அதிதீவிரப் போக்கை கொண்ட முன்னேற்றக் கட்சியை (**Frp**) தவிர்ந்த ஏனைய கட்சிகளிடமே இப் பேட்டி எடுக்கப்பட்டது. இக் கட்டுரை அச்சுக்கு போகும் வரை வலது (**Høyre**), இடது (**Venstre**) கட்சிகளிடம் இருந்து பதில் எதுவும் கிடைக்கப் பெறவில்லை. ஒரே கேள்விகளே சகல கட்சிகளிடமும் கேட்கப் பட்டன.

கேள்விகள்:

1. வெளிநாட்டவர்கள் உங்கள் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என நீங்கள் ஏன் கருதுகிறீர்கள்?
2. வெளிநாட்டவர் மீதான அச்சத்தைப் போக்க, வெளிநாட்டவர்களும் நோர்வேஜியர்களும் எவ்வாறு இணைந்து செயலாற்றலாம்.
3. நோர்வே ஒரு பல்லின சமூகம் என அரசியல்வாதிகள் கூறுகின்றனர். ஆனால் நடைமுறையில் இதனைக் காண முடிவதில்லை. இது பற்றித் தங்கள் கட்சியின் கருத்து யாது?

## சோசலிச இடதுசாரக்கட்சி (S.V)

**பதிலளிப்பவர்:சிக்ன.இ.குவாலே(Signe.E.Kvale)**

1) எமது கட்சி ஒரு சோசலிச இடதுசாரக் கட்சியாகும். இதன் கருத்து வாழ்க்கைத் தரமும் வருமானமும் நோர்வே வாழ்மக்களின் அடிப்படைத் தேவைகளைத் திருப்திப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். சுற்றுப்புறச்சூழலும் இயற்கை வளங்கள் பாதுகாப்பிலும் நாம் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும் என்பது எமது அடுத்த நிலைப்பாடாகும். எமது கட்சி நோர்வேயின் சட்டநியாதிக்கத்தில் மட்டுமின்றி உலகப் பிரச்சனைகளிலும் கூடிய கவனம் செலுத்தி வருகின்றது. குறிப்பாக உலகின் வடக்கு தெற்கு பிரச்சனைகளில் நாம் கூடிய அக்கறையுடன் செயலாற்றிவருகின்றோம். 3ம் உலக நாடுகளில் நிலவும் கடுமையான வறுமை சுற்றுப்புறச்சூழல் பாதிப்பு என்பவற்றிலும் இதற்கான மாற்றீடுகளைத் தேடுவதிலும் நாம் ஆர்வமுடன் செயல்ப்பட்டு வருகின்றோம். எமது கட்சி இனவாதத்தையும்

www.tamilarangam.net

நிறவாதத்தையும் கடுமையாக எதிர்க்கும் கட்சியாகும். நோர்வேயின் குடிவரவு, அகதிக்கொள்கைகள் மிகவும் கடுமையானது இவை மீளத்திருத்தப்படுவதுடன் மாற்றியமைக்கப்படவும் வேண்டும். இன்னும் பல அகதிகளை நோர்வே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**இலங்கையில் உள்ள தற்போதைய நிலையில் இலங்கை அகதிகளை திருப்பி அனுப்புவதை எமது கட்சி எதிர்க்கின்றது.**

2) பல இனங்கள் வாழும் இந்நாட்டில் விவாதங்கள் கருத்துப் பாமாறல்கள் ஊடாகவே இதற்குத் தீர்வுகாண இயலும் இனங்களின் மத்தியிலான கலாச்சாரப் பாமாற்றங்களும் இதில் காத்திடமான பங்களிப்பை வழங்க முடியும். வெளிநாட்டவர்களிற்குள்ள பிரச்சனைகள் சாயான முறையில் வெளிபடுத்தப்பட்டும் அவர்களது கல்வித்தரம் தொழில்நுட்பத்திறன் என்பன போதியளவு வெளிக் கொணரப்படும் போதும் இப்பிரச்சனைக்கு ஒரு சாதகமான தீர்வைச் காணமுடியும். வெளிநாட்டவர்கள் இந்நாட்டின் அரசியல் சமூகவிஞ்ஞானம் போன்றவற்றில் ஆர்வம் குறைந்தவர்களாயுள்ளனர். இந்நிலை மாற வேண்டும். இதனூடாகவே இப்பிரச்சனைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைச் காணமுடியும்.

3) நோர்வே ஒரு பல்லின சமூகங்களைச் கொண்ட நாடு என்பதில் சந்தேகமில்லை. இது நடைமுறையில் செயல்ப்படுத்த நாம் அனைவருமே முயலவேண்டும். உண்மையில் இதை நடைமுறையில் கொண்டுவருவது அரசியல்வாதிகளின் கடமையாயினும் இங்கு வாழும் சகலருமே இதனை நடைமுறைாதியாக செயல்ப்படுத்த முழுமையாக ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

## கட்சி: மத்திய கட்சி (S.P) பதிலளிப்பவர் யமில் (ஒ லோ தலைமை வேட்பாளர்)



1. மத்திய கட்சி சகலாற்கும் சமத்துவமான ஒரு கொள்கையையே நாடு முழுவதிற்கும் கடைபிடிக்கின்றது. பாடசாலைகளில் தாய்மொழி போதனையை நாம் வலியுறுத்துகின்றோம் பாராளுமன்றத்தில் பிரதான எதிர் கட்சியாக இருக்கும் நாம் சாதாரண பொது மக்களின் நலன்கலை கருத்திற் கொள்ளாத அரசின் செயல்பாடுகளை கண்டித்து வருகிண்றோம்
2. நாம் அனைவரும் மனிதர்களே எம் மத்தியில் இன மத மொழி,வயது,பால்,ஏழைபணக்காரன் ஏன்ற வேறுபாடின்றி ஒன்றினைய வேண்டும் எம்மத்தியில் உள்ள முரண்பாடுகளை தவிர்த்து இதற்காக ஒற்றுமையுடன் செயல்படவேண்டும்.சகல இன மக்களிற்கும் தாம் விரும்பிய மதத்தை பின்பற்றவும் தாம் விரும்பிய தொழிலை மேற்கொள்ளவும் உாமையுடையவர்கள்
3. மத்திய கட்சி இனங்களிடையே சமத்துவத்தை நாடு தழுவிய ாதியில் வலியுறுத்தி வருகின்றது நாட்டின் மனித வளமும் செல்வமும் சாயான முறையில் பகிரப்பட்டால் இப்பிரச்சனையை ஒரளவாயினும் குறைக்கலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**கட்சி: கிறி தவ மக்கள் கட்சி (Krf)**
**பதிலளிப்பவர்: தூர கிறி ஈயாண்சன் (TORECHRITIANSEN)**
**அரசியல்துரை செயலாளர்.**

1. எமது கட்சி கிறி தவ மத பின்னியை கொண்ட கட்சியாகும் கட்சியின் கல்விகொள்கை, சுற்றுப்புறசூழ் மதுபான கொள்கைகள் மட்டுமின்றி முதியோரான் சமூக வாழ்க்கை தொடர்பான எமது கொள்கைகளும் வெற்றிப்பெற சகலரும் எமக்கு வாக்களிக்கவேண்டும் என்று விரும்புகிண்றோம். இங்கு வாழும் சகல இனத்தவாகளும் மதத்தவர்களும் சாசமமாக நடத்தப்படவேண்டும் என்பது எமது கட்சியின் கருத்தாகும் அகதிகள், வெளிநாட்டவர் தொடர்பான நோர்வேயின் தற்போதைய கொள்கை மிகவும் கடுமையானது. இது கண்டிக்கதக்கது. அரசாங்கமும் தொடர்புசாதணங்களும் வெளிநாட்டவர்கள் தொடர்பாக பாதகமான விடயங்களை மட்டுமே முதன்மை படுத்துகிண்றன. எமது கட்சின் விருப்பிற்கு முற்றிலும் முரகவே வெளிநாட்டவர் தொடர்பான தற்போதைய அரசின் கொள்கைகள் அமைந்துள்ளது.

2. வெளிநாட்டவர் விடயத்தில், குறிப்பாக கறுப்பினத்து மக்கள் மீது இந்நாட்டு பொலிசார் நடந்துகொள்ளும் முறை மிகவும் கண்டிக்கத்தக்கது முன்னறிவிப்பு எதுவுமின்றி இரவோடுஇரவாக அகதிஅந்த த்து கோரயோர் நாடுகடத்தப்படுவது இங்கு வாழும்வெளிநாட்டவர்களை பயமுறுத்தும் செயலாகும் வெளிநாட்டவர்கள் மீதான அச்சத்தை நீக்க ஒரே வழி வெழிநாட்டவர்கள் நோர்வீஜய மக்களுடன் தமது தொடர்புகளை அதிகாப்பதும் நோர்வேநாட்டவர்கள் வெளிநாட்டவர்களுடன் தமது உறவுகளை அதிகாப்பதுமே. இதற்கு உதவ எமது கட்சி என்றும் தயாராகவே உள்ளது.

3. நோர்வே பவ்வின மக்களை கொண்ட ஒரு சமூகமே இனங்கள் மத்தியிலான கலாச்சார பாமாற்றங்களும் புாந்துணர்வுமே இதனை வலுப்படுத்தும் நோர்வே நாட்டவர்கள் சில சமயம் இவ்விடயத்தில் குறைந்த கவனத்துடன் செயலாற்றி இருக்கலாம் இது தொடர்பாக பல பிழையான அபிப்பிராயங்கள் சில நோர்வீஜயர்கள் மத்தியில் உண்டு ஏனைய கலாச்சாரங்களை கொண்ட மக்களுடண புாந்துணர்வும் ஒத்துழைப்பும் நோர்வீஜய கலாச்சாரத்தை ஒரு போதும் பாதிக்கட் போவதில்லை.சாயான புாந்துணர்வுப் ஏற்றுக்கொள்ளும் மணப்நோக்கும் இருப்பின் இப்பிரச்சனைக்கு நிரந்தர முடிவை காணலாம்.

**கட்சி: தொழில்கட்சி (A:P)**
**பதிலளிப்பவர்: ஆன நேசய்ம் (ANE NESHEIM)**

தனிக்கட்சி என்ற ாதியில் எமது கட்சியே மக்கள் செல்வாக்கை அதிகம் பெற்ற கட்சியாகும் அகதிகள் வெளிநாட்டவர்கள் விடயத்தில் அவர்களது அடிப்படை பிரச்சனைகளை தீர்த்து வைப்பதில் நாம் கூடிய கவனம் செலுத்தி வருகிண்றோம் நாட்டின் வேலையற்றோர் பிரச்சனையை தீர்க்க பலதிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிண்றோப் சுற்றுப்புறசூழல்பாதுகாப்பு,புதிய திருத்தப்பட்ட கல்விக் கொள்கை,(Reform 94) அதிகளவிலான குழந்தை இல்லங்கள் போண்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பல விடயங்களில் கவனம் செலுத்தும் நாம் நாட்டின் எதிகாலத்திற்கு அவசியமான நீடித்த நிரந்தர திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிண்றோம்
இதற்கான ஒரே வழி இனங்களிடையே புாந்துணர்வையும் நட்புறவையும் விருத்திசெய்வதேயாகும் இதற்கு தேவையான கலாச்சார நிகழ்ச்சிகலையும் சந்திப்பு நிகழ்ச்சிகலையும் தொடர்ச்சியாக நடாத்துவதுடன் தனிப்பட்டாதியிலான உறவுகளை வளர்த்துக்கொள்வதும் அவசியமாகும் இங்கு வாழும்வெளிநாட்டவர்களும் இந்நாட்டவர்களும் இனைந்தே இப்பிரச்சனைக்கு தீாவை காணலாம்
நோர்வே ஒரு பல்லின கலாச்சாரத்தை கொண்ட நாடு என்பதை எமது கட்சி முழுமையாக ஏற்றுக் கொள்ளுகிண்றது. இதனை நடைமுறைபடுத்த தேவையான சகல வழிமுறைகளையும் எமது கட்சி மேற்கொண்டேயுள்ளது. இதற்கான ஒத்துழைப்பை இரு சகல பிாவினரும் வழங்கவேண்டும் இதுபற்றிய போதிய விபரங்களை எமது கட்சியின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளோம்

□□□□□□□□□□

## கட்சி: கம்யூனிச இடதுசாரா கட்சி (R:V) பதிலளிப்பவர் பீன் ஊலாவ் (FIN. OLAV. R)


1.எமது கட்சி தொழிலாளர்களையும் சமுகத்தில் சமூக, அரசியல் ாதியாக பலவீனமான பிாவினாற்காக குரல் கொடுக்கும் கட்சியாகும் இங்கு வாழும் வெளிநாட்டவர்கள் பலதரப்பட்ட நெருக்கடிகளிற்கு மத்தியில் வாழ்ந்து வருகிண்றனர் மிக அதிகளவிலான வெளிநாட்டவர்கள் வேலை வாய்ப்பின்றியும் தொழிற் கல்வி வாய்ப்பு இன்றியும் உள்ளனர் அதிகாரத்தில் உள்ள பிரிவினர் தொடாந்தும் தமதும் தம்சார்ந்தவர்களின் நலனகளிலுமே அக்கரையாயிருக்கிணறனர்.
அன்மைக்காலவாக அதிகாத்து வரும் இனவாத நிறவாத அமைப்புக்களிற்கு எதிராக நாம் தொடர்ந்து போராடி வருகினறோம் எமது நடவடிக்கைகள் வெற்றிபெற சகல பிாவினரும் எமக்கு ஆதரவு வழங்க வேண்டும்.
2. எமது கட்சி இனவாத அமைப்புக்களிற்கு எதிராகவும் வெளிநாட்டவர் மீதான அச்சம் தொடர்பாகவும் தொடச்சியாக எதிர்த்து குரல் கொடுத்து வருகின்றோம் இங்கு வாழும் சகல இன மக்களும் ஒற்றுமையாக செயல் படுவதன் மூலம் இப்பிரச்சனைக்கு தீர்வு காணலாம்
3.நோர்வே பல், இன மத மொழி கலாச்சாரங்கலை கொண்ட ஒரு நாடாகும் இங்கு வாழும் சகலரும் சமத்துவமாக நடாத்தப்பட வேண்டும் என்பதே எமது கருத்தாகும் இதை நடைமுறை ாதியாக சாத்தியமாக்க சகல இன மக்களும் ஒத்துழைப்பு நல்கவேண்டும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

• மக்களரசு



# எழுத்தாளர் கணேசலிங்கத்துடன் செவ்வி

மக்களரசு: தங்களின் முதல் படைப்பு எது? எந்த இதழில் வெளியானது?
கணேசலிங்கம்: ஆரம்பத்தில் சுதந்திரன், தினகரனில் கட்டுரைகளை எழுதி வந்தேன். பின்னர் அவ்வேளை தினகரன் ஆசிரியராக இருந்த வே.க.ப.நாதன் கதைகள் எழுதும்படி வேண்டினார். மன்னிப்பு என்ற சிறுகதை எழுதினேன். அதைத் தொடர்ந்து காவோலை விழுந்தது , பிழைக்க பிள்ளை ஆகிய கதைகள் நல்ல வரவேற்புப் பெற்றன. ஆசிரியர் சிறுகதையே கேட்டு வந்தார். 200க்கு மேற்பட்ட சிறுகதைகள் எழுதினேன். ஐந்து சிறுகதைத் தொகுதி நூல்களும் வெளியிட்டேன்.

மக்களரசு: தாங்கள் நடாத்திய குமரன் இதழின் அனுபவங்கள்.....?
கணேசலிங்கம்: பல அனுபவங்கள். கதை, கட்டுரைகள் எழுதுபவர்கள் குறைவு. நானே பல புனைபெர்களனில் அரசியல் கட்டுரை, மதிப்புரை, சிறுகதை, கேள்வி பதில் யாவையும் எழுத நேரிட்டது. புக்கவிதை மட்டும் ஏராளமாக வந்தது. பெரும்பாலும் துணுக்குகளே, கவிதை என. கவிஞன் என்ற பெயரெடுப்பது இலகுபோலப் பலர் எண்ணி எழுதினர். நல்ல கருத்துகளை மட்டும் உள்ள வரிகளை மட்டும் தேர்ந்தெடுத்து வெளியிட்டேன். ஆயினும் இரண்டு கவிஞர்களுக்கு ஆர்வமூட்டி ஒழுங்காக வெளியிட்டு வந்தேன். ஒருவர் புதுவை இரத்தினதுரை, மற்றவர் சாருமதி. எழுதுவது மட்டுமல்ல, புரூப் பார்ப்பது, விநியோகம் யாவற்றையும் நானே கவனிக்க நேர்ந்தது. 77 இதழ்கள் வெளியிட்டேன். ஆங்காங்கே காண்பவர்கள் பலர் குமரனிலேயே அரசியல் கற்றோம் என்று கூறுவதில் பெருமையே. வேறு லாபம் ஏதுமில்லை.

மக்களரசு: உங்கள் நாவல்களில் செவ்வானம் தனித்துப் பிரகாசிப்பதாக விமர்சகர்கள் கூறுகிறார்கள், ஏன்?
கணேசலிங்கம்: நாவல் வரலாற்றில் குறிப்பிடத்தக்க நாவல் என்ற பாராட்டு பல

> புக்கவிதை மட்டும் ஏராளமாக வந்தது. பெரும்பாலும் துணுக்குகளே, கவிதை என. கவிஞன் என்ற பெயரெடுப்பது இலகுபோலப் பலர் எண்ணி எழுதினா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

: மற்ற லட்சக் கணக்கான அகதிகள் போல விரும்பாததே. ஆயினும் கஷ்டமான வாழ்வையும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதே என் கொள்கை. ஆண்டுக்கு இரண்டு நாவல்கள் எழுதி வெளியிடுகிறேன். மற்றும் பல நல்ல நண்பர்கள் புலம்பெயர்ந்த காலத்தைப் பயன்படுத்த உதவுகின்றனர்

விமர்சகர்களால் கூறப்பட்டது உண்மையே. சுப்பிரமணிய ஐயர் தன் நாவல் ஆய்வில் முதலிடம் கொடுத்துள்ளார். புதிய தலைமுறை என கோவையில் இருந்து வெளிவந்த மாக்சிய இதழ் தனிச் சிறப்பு இதழ் ஒன்றை இந்நாவல் பற்றி விமர்சித்து வெளியிட்டது. இலங்கையில் சமகால வரலாற்றில் முக்கிய காலகட்டத்தை நாவல் பிரதிபலித்தது. புரட்சிகர நாவல் எழுதுவதற்கு தமிழில் முன்னோடியானதாகக் கொள்ளப்பட்டது. அன்றைய சிறிமாவோ இடதுசாரிக் கூட்டாட்சியையும், காதலையும் சிலநேரம் மயக்கி மறையும் செவ்வானம் போன்றது என உருவகப் படுத்தியது. தொழிற்சங்கத் தலைவனை வீர புருஷனாக நாவலில் கையாண்டது, கலாநிதி கைலாசபதியின் மீக நீண்ட முன்னுரையைக் கொண்டது எனப் பலவற்றைக் கூறலாம்.

மக்களரசு: அபலையின் கடிதம் மொழிபெயர்ப்பு நாவலுக்கு அடுத்ததாக ஏன் இத்துறையில் ஈடுபடவில்லை?

கணேசலிங்கம்: ஸ்டீபன் ஸெபாக் என்ற ஜெர்மனிய யூத நாவலாசிரியர் தன்னைக் கவர்ந்த எழுத்தாளர் என்று மராட்டிய எழுத்தாளர் காண்டேகர் என்னிடம் கூறினார். அன்னாரின் நாவல்கள் இரக்கத்திற்கு விழிப்பாயிரு, ஸ்கொட் மேரி, அபலையின் கடிதம் ஆகியவற்றைப் படித்தேன். ஓய்விருந்த வேளை மாதிரிக்காக இக்குறுநாவலை மொழிபெயர்த்து வெளியிட்டேன். பின்னர் மொழிபெயர்க்க நேரம் கிட்டவில்லை. அது சிரமமான பணி. நானே நாவல்களை எழுதத் தொடங்கிவிட்டேன். மொழிபெயர்ப்பிலும் என் நாவலை எழுதுவது எளிதுபோலத் தோன்றுகிறது.

மக்களரசு: முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் உங்கள் பங்கு?

கணேசலிங்கன்: செயற்குழுவில் ஒரு அங்கத்தவனாக இருந்து பணியாற்றினேன். முற்போக்கு எழுத்து என்பது புதிய சமூகத்திற்கு வழிகாட்டும் யதார்த்த தேசிய இலக்கியம் என்பதை எழுத்திலும் விமர்சனத்திலும் பேச்சிலும் காட்டி வந்தேன். மகாநாடுகள், கூட்டங்கள், புதுமை இலக்கிய வெளியீடுகள் யாவிலும் பங்காற்றினேன்.

மக்களரசு: தங்களை எழுதத் தூண்டிய எழுத்து.... மற்றும் நம்பிக்கை அளிக்கும் எழுத்து பற்றி....

கணேசலிங்கன்: ஆங்கிலம் மூலம் உலகத்துப் பிரபல எழுத்தாளர்களை எல்லாம் படித்து வந்தேன். தமிழிலும் மொழிபெயர்ப்பு உள்பட பிரபல அனைத்து எழுத்தாளர்களையும் படித்தேன். இன்றும் படித்து வருகிறேன். குறிப்பிட்டு எவரையும் சொல்வதற்கில்லை. நானே எனக்குத் தனிவழியை வகுத்தேன் என்றே கூறுவேன். மேல்நாட்டு, பிற இந்திய மொழி எழுத்தாளர்களுடன் ஒப்பிடுகையில் தமிழிலும் நல்ல எழுத்துகள் வந்துகொண்டேயிருக்கின்றன.

மக்களரசு: இன்றைய புலம்பெயர்ந்த வாழ்வு.....?

கணேசலிங்கன்: மற்ற லட்சக் கணக்கான அகதிகள் போல விரும்பாததே, ஆயினும் கஷ்டமான வாழ்வையும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதே என் கொள்கை. ஆண்டுக்கு இரண்டு நாவல்கள் எழுதி வெளியிடுகிறேன். மற்றும் பல நல்ல நண்பர்கள் புலம்பெயர்ந்த காலத்தைப்

www.tamilarangam.net

பயன்படுத்த உதவுகின்றனர். அது என் அதிர்ஷ்டமே.

மக்களரசு: இலக்கியத்தில் யதார்த்தவாதம் காலாவதியாகி விட்டதாய்ச் சொல்கிறார்கள். இது பற்றி உங்கள் கருத்து; மற்றும் இன்வருகிற முற்போக்கு எழுத்து எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?

கணேசலிங்கன்: யதார்த்தவாதத்தை நன்கு புரியாதவர்களின் கூற்றேஇது. கலாநிதி கைலாசபதி கலை இலக்கியத்தை கற்பனாவாதம், இயற்பண்புவாதம், யதார்த்தவாதம் எனப் பிரித்து, தமிழ் நாவல் இலக்கியத்தில் விளக்கியுள்ளார். இயற்பண்புவாதத்திற்கும், யதார்த்தவாதத்திற்கும் இங்கு பலரால் வேறுபாடு காண முடியவில்லை. இயற்பண்புவாதம் வாழ்வைக் கண்ணாடி போலப் பிரதிபலிப்பது. புதிய புரட்சிகர சமூகத்திற்கு வழிகாட்டியாக மாதிரிப் பாத்திரங்களை மாதிரிச் சூழ்நிலையில் படைப்பதே யதார்த்த இலக்கியம். சமூகத்தை அப்படியே தேக்கி வைக்கப் படைப்பதா? சமூக சீர்திருத்தம் மட்டும் வேண்டுவதா? தனிச்சொத்துடைமை அழிந்த புதிய சமுதாயத்திற்கு வழிகாட்டுவதா? யதார்த்தவாதம் பின்னைய கணிப்புச் சார்ந்தது. முற்போக்கான எழுத்தை இன்று பின்வரும் கண்ணோட்டங்களில் அணுகலாம்.

1. சமூகத்தன் வர்க்க முரண்பாடுகளைக் கையாண்டு சமூகத்தை முன்னோக்கிச் செல்ல வழிகாட்டுகிறதா?

## ஆபத்தான பொம்மை!



சிறுவர்களுக்குப் பல விளையாட்டுப் பொருட்கள் விற்பனை நிலையங்களில் உள்ளன. ஆனால் இவற்றில் சில அவர்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் என்பதை நாம் அறிவதில்லை. விளையாட்டுப் பொருட்கள் முற்றிலும் பாதுகாப்பான பொருட்களால் செய்யப் படுவதில்லை. சில விளையாட்டுப் பொருட்களில் கலக்கப் பட்டுள்ள இரசாயனப் பொருட்கள் ஒவ்வாமை (Allergi) போன்ற நிலைகள் ஏற்படக் காரணமாகின்றன.

உலகப் புகழ்பெற்ற 'பார்பி' என்ற பொம்மை அனேக குழந்தைகளின் இதயம் கவர்ந்தது. பல வண்ணங்களில், வடிவங்களில் கிடைக்கும் இந்தப் பொம்மையின் தயாரிப்பில் பொலி வைனைல் குளோரைட் (PVC) என்ற இரசாயனப் பொருள் இருப்பதாகவும், அது குழந்தைகளுக்கு மிக ஆபத்தை விளைவிக்கக் கூடியது என்பதையும் சூழல் பாதுகாப்பு இயக்கமான 'கிறீன்பீஸ்' அண்மையில் அறிவித்துள்ளது.

பெரியவர்களால் சூழலுக்குக் கேடு விளைவிக்கும் பொருட்களை இனங்காண முடியும். ஆனால் குழந்தைகள்......?

●

மனு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

2. அடக்கி ஒடுக்கப்படும் தலித்துக்களின் வாழ்க்கையைப் பிரதிபலித்து அவர்களை வளர்ச்சிப் போக்கில் இட்டுச் செல்கிறதா?
3. பெண்ணியத்திற்கு சார்பாகப் பெண்களை, அடக்கி ஒடுக்கப்படுவதற்கு எதிராகக் குரல் கொடுத்து அன்னாரின் அடிமைத்தனத்தைப் போக்க உதவுகிறதா?
4. அமைப்பியல்வாதம் எனப் பெரும்பாலோர் புரிந்துகொள்ளாத ஐரோப்பிய வார்த்தையைப் பயன்படுத்துகின்றனர். அனைத்து சமூகங்களும் உற்பத்தி முறையை ஒட்டியே அமைக்கப்பட்டுள்ளன. அதாவது பொருளாதார நடைமுறை மூலமே சமூக அமைப்புகள் தீர்மானிக்கப் படுகின்றன. அரசியல், சட்டம் சார்ந்தவை, கருத்தியல்கள் மேல்மட்ட அமைப்பு சார்ந்தவை. பொருளாதார நடைமுறை மாற்றம் ஒரு உற்பத்தி முறையிலிருந்து மறு உற்பத்தி முறைக்கு மட்டுமல்ல - ஒரு சமூக உற்பத்தியில் இருந்து மறு சமூக அமைப்பாலுமே மாறுகிறது. இதைப் புரிந்து எழுதுபவர் எவருமிலர். ஆயினும் விஞ்ஞான முறையாக முற்போக்கு, கலை இலக்கியத்தை ஆய்ந்து காண அமைப்பியல்வாதக் கோட்பாட்டுக்கு உதவுகிறதா அல்லது வெறும் கற்பனையாகப் படைக்கப்படுகிறதா என்பதை அறிந்து கொள்ளலாம்.
எவ்வாறு கணக்கிட்டாலும் முற்போக்குக் கலை இலக்கியம் என்பது மாக்சிய விஞ்ஞான அடிப்படையில் அமைந்திருக்கிறதா என்பதை மேலே குறிப்பிட்ட ஆய்வு முறைகளை முன்வைத்து தேரந்துகொள்ளலாம்.
5. சுற்றாடல் பாதுகாப்பு, மாசுபடுத்துவதைத் தடுத்தல் போன்ற முற்போக்கான கருத்துகள் கலை, இலக்கியத்தில் கையாளப்படுகிறதா என்பதுவும் கவனிக்கப்பட வேண்டும். காற்றும் நீரும் பூமியும் மனித வாழ்வுக்கு இன்றியமையாதவை. அணுகுண்டுப் பரீட்சைகள் இன்று உலகிற்கே அச்சுறுத்துபவையாக உள்ளன.
6. மனித உரிமைகள் பாதுகாக்கப் படுகிறதா என்பதும் கவனிக்கப்பட வேண்டும். பாட்டாளிகளும், ஒடுக்கப் படுபவரும் அடித்துத் துன்புறுத்திக் கொல்லப் படுகின்றனர். உயர்சாதியினரால் மட்டுமல்ல, அரசயந்திரத்தால் கற்பழிப்பு, வன்முறை, கொலைகள் நடைபெறுகின்றன. இவற்றை எதிர்க்கும் கலை இலக்கியங்களும் அத்தியாவசியமானவை.
மேலே கூறப்பட்ட கண்ணோட்டங்களை முன்வைத்துக் கலை இலக்கியங்களை விமர்சிக்கும் காலகட்டத்தை நாம் இன்று அடைந்துவிட்டோம். உள்ளடக்கத்தில் இத்தனை பார்வைகளும் வேண்டப் படுகின்றன. முற்போக்கான கலை, இலக்கியத்தை இக்கண்ணோட்டங்கள் மூலம் எளிதில் தரம்பிரித்துக் காணலாம்.


# சுவடுகள்

தமிழ் மாத இதழ் நோர்வே

## ஏழாண்டு நிறைவிதழ்

1988ன் பிற்பகுதியிலிருந்து மாத இதழாகத் தொடர்ந்து வெளிவரும் சுவடுகள் தனது ஏழாண்டு நிறைவையொட்டி சிறப்பு மலரொன்றை வெளியிட உத்தேசித்துள்ளது. இவ்விதழில் புலம்பெயர்ந்தோர் இலக்கியத்துக்கு இதுவரை பங்களித்த அனைவரது எல்லாவித படைப்புக்களும் இடம்பெற வேண்டுமென விரும்புகிறோம். படைப்புக்கள் தாளின் இருபக்கங்களிலும் எழுதப்படலாம். தயாரிப்புக் காலத்தைக் கணக்கில்கொண்டு, படைப்புக்களை விரைவில் அனுப்பி உதவுங்கள். மலர் சிறப்புறப் படைப்பாளிகளினதும், வாசகர்களினதும் ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. "மலருக்கான படைப்பு" என கடிதவுறையில் குறிப்பிடுங்கள்

SUVADUGAL,
HERSLEBS GT 43, 0578 OSLO,
NORWAY

SP Design




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தேசத்தின் குறிப்புகள்

• தேசபக்தன்

மூன்றாம் ஈழப்போர் தொடங்கியதில் இருந்து வடக்கு கிழக்கில் முழங்கிவரும் யுத்த வேட்டுகள் ஒரு முடிவுக்கு வருவதாகத் தெரியவில்லை. யுத்தத்தைத் தீவிரமாக்கிக் கொண்டே இரு தரப்பினரும் சமாதானத்திற்கான கதவுகளைத் திறந்து வைத்துள்ளதாக அறிவித்து வருகின்றனர். இது, சமாதானத்தைப் பேச்சுகளின் மூலம் அடைவதைவிட, யுத்தத்தின் மூலமே அடையலாம் என இரு தரப்பினரும் நம்புவதாகக் கருத இடம் தருகிறது.

சுதந்திர இலங்கையின் 47 வருட வரலாற்றில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களிடையே உறவுகள் மோசமாகப் பாதிப்படைந்து வந்துள்ளன. இதற்குப் பேரிறவாத சக்திகளே முக்கிய ஊன்றுகோலாக இருந்து வந்துள்ளன. இக் காலகட்டத்தில் செயலாற்றிய ஏனைய இனத் தலைமைகளும் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட வேண்டும் என்றாலும், தேசிய சிறுபான்மை இன மக்களின் நம்பிக்கைகளும், எதிர்பார்ப்புகளும் பேரினவாத சகிதகளாலேயே சிதறடிக்கப் பட்டதை எவரும் மறுக்க இயலாது. தற்போது, இத்தனை வருடங்கள் கழிந்து, சந்திரிகா அரசால் முன்வைக்கப்பட்ட சமாதானத் தீர்வுத் (?) திட்டங்கள் சில முன்னேற்றகரமான அம்சங்களைக் கொண்டிருந்தாலும் தமிழ் மொழி பேசும் மக்களது பிரச்சனைகளை முற்றாகத்

www.tamilarangam.net

தீர்த்து வைக்கக்கூடிய ஒரு முழுமையை இந்தத் திட்டம் கொண்டிருக்கவில்லை. அரசால் முன்வைக்கப்பட்ட யோசனைகள், தமிழ் மக்களது பிரச்சனை வெறுமனே 'அதிகாரப் பரவலாக்கல்' தொடர்பானது மாத்திரமே என்ற அடிப்படையில் வரையப் பட்டவை. தமிழ் மக்களது பிரச்சனைகள் ஒடுக்குவோருக்கும், ஒடுக்கப் பட்டோருக்கும் இடையிலான அடிப்படை முரண்பாடே. இதனைத் தீர்க்க அதிகாரப் பரவலாக்கம் ஒரு ஊடகமாகத் தொழிற்படலாமேயன்றி, அதிகாரப் பரவலாக்கம் மாத்திரம் இனப் பிரச்சனையைத் தீர்த்துவைக்க முடியாது.

தற்போது முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்டம் இலங்கை முழுமையையும் கருத்திற் கொண்டு வரையப் பட்டது. ஆனால் உண்மையில் இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனை முழு இலங்கைக்குமான பிரச்சனைகளில் இருந்து வேறுபட்டது. அதிகாரப் பரவலாக்கம் இலங்கை போன்ற நாடுகளில் - முக்கியமாகச் சில பிராந்தியங்களைக் கருத்திற் கொண்டு பார்க்கையில் - வரவேற்கத்தக்க மாற்றம் எனினும், தமிழ் பேசும் மக்களட கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேற்பட்ட ஆயுதப் போராட்டத்தின் துன்பங்களை, இழப்புகளை ஈடுகட்ட இத் தீர்வு யோசனைகளால் முடியாது.

சந்திரிகாவின் இத் தீர்வுத் திட்டம் சில கசப்பான உண்மைகளையும் தெளிவாக்கியுள்ளது. தமிழ் மக்களுக்கு அதிருப்தியைக் கொடுத்துள்ள இத் திட்டத்தைப் பல சிங்கள அமைப்புகள், கட்சிகள் எதிர்த்துள்ளன. தமிழ் மக்களுக்குத் திருப்தி தர முடியாத ஒரு தீர்வுக்கே இந்தக் கொதி கொதிக்கும் இனவாதிகள், உண்மையில் தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தக் கூடிய ஒரு தீர்வுக்கு எவ்வளவு எதிர்ப்புத் தெரிவிப்பர் என்பதைக் கற்பனையில்தான் பார்க்க வேண்டும். இது, இதற்கு மேல் எதையும் வழங்க அரசு தயாராகாது என்பதையும் காட்டுகிறது. இந்த நிலையில் தமிழீழத்துக்கான குரல் ஓங்கி ஒலிப்பதைச் சிங்கள அரசியல்வாதிகள் - எவராயினும் - எவ்வாறு தவறு என்று கூறமுடியும்? சாதாரண தீர்வுத் திட்ட யோசனைகளையே முழுமூச்சுடன் எதிர்க்கும் சிங்கள இனவாத அரசியலாரும், பௌத்த சங்கங்கள் மற்றும் அமைப்புகளும், இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டால் நாடு இரண்டாகப் பிரியும் எனக் கூறி வருகின்றனர். இவர்களது பிரச்சாரத்துக்கு முன்பாகவே நாடு பிரிந்துதான் உள்ளது என்பதையோ, இலங்கை அரசுக்கு வடக்கு கிழக்குப் பிரதேசங்களின் மீதுள்ள ஒரே பிடி, அங்குள்ள நிர்வாகச் செலவினங்கள் மாத்திரமே என்பதையோ இவர்கள் உணர்ந்ததாய்த் தெரியவில்லை. நாட்டின் ஐக்கியம் பற்றி வாய் கிழியக் கூச்சலிடும் இவர்களே இலங்கையின் ஐக்கியத்துக்கும், இனங்களது சுயாதிபத்தியத்திற்கும் தடையாக உள்ளனர்.

சந்திரிகா அரசின் தீர்வுத் திட்டங்களை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ள போதிலும், இதற்காகச் சொல்லப்பட்ட முக்கிய காரணம், தீர்வுத் திட்டத்தை முன்வைத்துவிட்டுத் தமிழ் மக்கள் மீது அரசு யுத்தப் பிரகடனம் செய்துள்ளது, இது அரசின் இரட்டை வேடத்தைக் காட்டுகிறது என்பதே. தீர்வுத் திட்ட உள்ளடக்கங்கள் பற்றிய தமது தெளிவான விமர்சனத்தை முன்வைத்தல் பயன் தரக்கூடியது. முக்கியமாக, தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமை, வடக்கு கிழக்கு துண்டாடப் பட்டிருப்பமை போன்ற விடயங்களைத் தெளிவாக மறுத்துரைக்க முடியும். இந்தத் தீர்வுத் திட்டங்கள் பற்றிச் சாதகமான முடிவுகளை எடுக்குமாறு விடுதலைப் புலிகளை வெளிநாட்டு ராஜதந்திரிகள்,

www.tamilarangam.net

சமாதானத் (?) துாதர்கள் வலியுறுத்தி வருகின்றனா. இதை முறியடிக்கும் விதமாகத் தமிழர் புலம்பெயர்ந்து வாழும் ஐரோப்பிய, வடஅமெரிக்க, அவுஸ்திரேலிய நாடுகளில் ஊர்வலங்கள், கூட்டங்கள் மூலம் இலங்கை அரசின் சமாதான முகமூடியைக் கிழிக்கும் எதிர்ப் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளனர்.

தீர்வுத் திட்டங்களை முன்வைத்துள்ள சந்திரிகா, யார் எதிர்த்தாலும் இவற்றை மக்கள் ஆதரவுடன் நடைமுறைப் படுத்தியே தீர்வதாகக் கூறிவருகிறார். இது தொடர்பான பிரேரணை நகல்களைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளதாகக் கூறியுள்ளார். மற்றவர்களும் தங்களது அபிப்பிராயங்களைப் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிக்கலாம் எனக் கூறியுள்ள சந்திரிகா யார் எதிர்ப்பினும் இத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படும் என்றும் கூறியுள்ளார். பிரதானஎதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி திட்டத்திலுள்ள சில விடயங்களை எதிர்ப்பதாகக் கூறியுள்ளது. ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதான கட்சியான சுதந்திரக் கட்சி அங்கத்தவர்கள் சிலரும் தீர்வு யோசனைகளை எதிர்ப்பதாகக் கூறியுள்ளனர். இந்நிலையில் சந்திரிகா கூறியபடி தீர்வுத் திட்டங்களைப் பொதுஜன வாக்கெடுப்பிற்கு விடும் பட்சத்தில் எத்தகைய முடிவு கிடைப்பினும் தமிழ் பேசும் மக்களை அது பாதிக்கப் போவதில்லை. தீர்வுத் திட்டத்துக்கு எதிராக சர்வசன வாக்கெடுப்பு முடிவுகள் அமையுமாயின் அது, தமிழ் பேசும் மக்களது அரசியற் போரை மேலும் வலுப் படுத்துவதாகவே அமையும். மாறாக திட்டத்திற்குச் சாதகமாக மக்கள் தீர்ப்பு வழங்கினால், தொடர்ந்து முன்வைக்கப்படும் தீர்வு யோசனைகள் எவையுமே, தற்போது வைக்கப்பட்ட தீர்வுகளுக்குக் குறைவாக அமைய முடியாது என்பதுடன், இலங்கை அரசியலில் பௌத்தசங்க, இனவாத அமைப்புகளின் ஆதிக்கம் சிதறடிக்கப்பட ஒரு வாய்ப்பாக இருக்கும். அத்துடன் மக்கள் ஒரு நீதியான, உறுதியான, சமாதானத் தீர்வையே விரும்புகிறார்கள் என்பது ஐயத்துக்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்படும்.

உத்தேசத் தீர்வுத் திட்டத்தில் உள்ள சாதகமான அம்சங்கள்:

1. ஒற்றையாட்சிமுறை நீக்கப்பட்டுப் பிராந்தியங்களின் ஒன்றியமாக இலங்கை ஆக்கப்படல்.

2. காணி, குடியேற்றங்கள் பிராந்திய அரசுகளுக்கு வழங்கப் படல்.

3. பிராந்திய அரசின் அனுமதியுடன் மட்டுமே குறித்த பிராந்தியத்திற்கு மத்திய அரசு படைகளை அனுப்ப முடியும்.

4. எக்காரணம் கொண்டும் பிராந்திய அரசை மத்திய அரசு தனது சுயவிருப்பின்



www.tamilarangam.net

அடிப்படையில் கலைக்க இயலாது.

5. சட்டம் ஒழுங்கு வரையறுக்கப்பட்ட அளவில் பிராந்திய அரசுகளுக்கு வழங்கப்படல்.

6. ஓரளவு தெளிவான வலுவேறாக்கம் (அதிகாரப் பகிர்வு).

சமாதானத் திட்டத்தில் பாதகமான அல்லது தெளிவுபடுத்தப்படாத அம்சங்கள்

1. நாட்டின் பிராந்திய எல்லைகள் மீள வரையறுக்கப்படல்.

2. தேசிய இனங்களின் சுயாதிபத்திய விடயங்கள் தெளிவாக வரையறுக்கப்படவில்லை.

3. இலங்கையின் முக்கிய தேசிய இனங்களில் ஒன்றான மலையக மக்களின் பிரச்சனை கவனத்திற் கொள்ளப்படவில்லை.

4. இலங்கைத் தேசிய இனங்களின் தாயகக் கோட்பஏடு பற்றிப் போதிய விளக்கமின்மை.

5. தெளிவில்லாத முறைசார் கல்விக் கோட்பாடு பற்றிப் போதிய விளக்கமின்மை.

6. பௌத்த மதத்திற்கு மட்டுமான அரச அங்கீகாரம்.

7. பிராந்திய அரசுகள் தொடர்ந்தும் மத்திய அரசின் மறைமுகக் கட்டுப்பாட்டிற்கும், செல்வாக்குக்கும் உட்பட்டதாக இயங்க வேண்டிய நிலை.

8. தேசிய இனங்களிடையே கூர்மையடைந்துள்ள முரண்பாடுகளுக்குத் தீர்வு காணும் விதமாகத் திட்ட யோசனைகள் வரையறுக்கப்படவில்லை.

# இது பாட்டிகள் குரல்



உலகில் பெரும்பாலும் யுத்தங்கள் ஆண்களாலேயே தீர்மானிக்கப் படுகின்றன. ஆனால், பெண்களும் சிறுவர்களும் பெருமளவில் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். யுத்தத்திற்கு எதிரான குரல்கள் பெரும்பாலும் பெண்களிடம் இருந்தே வருகின்றன.

அணு ஆயுதங்களை ஒழிக்கவும், மேலும் பரவாது செய்யவும் நோர்வேப் பாட்டிகள் இணைந்து செயலாற்றி வருகின்றனர். இவர்களை அடிக்கடி நோர்வேப் பாராராளுமன்றத்தின் Stortinget) முன்பாகக் காணலாம். அணு ஆயுதத்திற்குத் தமது எதிர்ப்பைத் தெரிவிக்க இவர்கள் ஒழுங்காகக் கூடி வருகின்றனர். சிறிய செய்தி மடல்களையும் இவர்கள் வெளியிடுகின்றனர்.

தொடர்புகளுக்கு: Bestemødre mot atomvàpen, Postboks 9370 Grønland, 0133 Oslo.

மனு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



• யமுனா ராஜேந்திரன்

# புலம் பெயர் இலக்கியம் கோட்பாடு பற்றிய பிரச்சனைகள்

Exile literature/ Afro American literature/ British Asian literature/ மலையகத் தமிழ் இலக்கியம்/ French african literature/ அகதி இலக்கியம்

இந்த இலக்கியங்களில் எல்லாவற்றிலும் பொதுவான அம்சம் ஏதோ ஒருவகையில் தாய்மண்ணை விட்டு வந்தவர்களால் இவ்விலக்கியங்கள் படைக்கப் படுகிறது.

1. காலனியாதிக்கத்தின் நேரடி விளைவாக/ இரு கலாச்சாரங்களின் மோதலில் அல்லது இணைதலில் பிறந்த இலக்கியங்கள்.

2. மூன்றாம் உலக நாடுகளில் இருந்து கூலி அடிமைகளாகக் கொண்டுவரப் பட்டவர்கள் புதிய ஆதிக்கக் கலாசாரத்தை எதிர்க்கும்போது தோன்றும் இலக்கியங்கள்.

3. மூன்றாம் உலக நாடுகளின் ஆயுத மோதல்கள்/ அடக்குமுறை அரசுகள்/ வறுமை போன்றவற்றினால் புலம்பெயர்ந்த மக்களால் படைக்கப்படும் இலக்கியங்கள்.

4. காலனியாதிக்கத்தின் தொடர்பினால் தொழில்/ வியாபார நோக்கங்களுக்காக காலனிய நாடுகளில் ஒன்றில் இருந்து மற்றவற்றுக்கு இடம்பெயர்ந்ததால் மூன்று கலாச்சாரங்களின் மோதலில்/ இணைவில் பிறந்த இலக்கியங்கள்.

5. காலனியாதிக்கம் உருவாக்கிய புதிய மத்யதர வர்க்க அறிவுஜீவிகள் தமது வாழ்க்கை மேம்பாட்டுக்காக பழைய காலனிய/ ஆதிபத்திய நாடுகளுக்குச் சென்று படைக்கும் இலக்கியங்கள்.

இவையெல்லாம் புலம்பெயர் இலக்கியம் என்ற அகண்ட பிரிவுக்குள் வருபவைதான். ஆனால் இந்த இலக்கியங்களின் தன்மையும் (Nature) நோக்கமும் (Motivation) ஒன்றானதல்ல.

புலம்பெயர்வு என்பது ஒரே அரசியல்/ பூகோள எல்லைக்குள் நிகழும்போதும், அதனின்று இலக்கியத்தை மதிப்பிடும்போதும் பேசப் படுவதில்லை. இந்திரா பார்த்தசாரதி தான் டெல்லியில் இருந்து தமிழ்நாட்டைப் பற்றிப் படைத்தவை புலம்பெயர் இலக்கியம் என்கிறார். ரேயின் படங்கள் தாம் இழந்துவிட்ட மண்ணைத் தமக்குக் கொண்டுவந்து கொடுக்கிறது என்கிறார் பித்யுத் சர்க்கார். ரேயுக்கு கல்கத்தா நகரம் தவிர பிற படைப்புகளுக்கான தேடல்களெல்லாம் தம் மண்ணுக்கு மீண்டு வரவேண்டும் என நினைக்கும் புலம்பெயர்வு உணர்வுதான். மலையக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலக்கியமும் தமிழ்நாட்டு நினைவுகளை இலங்கையில் மீளக் கொண்டுவரும் தமிழனின் படைப்புகள்தான்.

Exile literature என்கிற பதம் காலனிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்த மக்களைப் பற்றி/ அவர் படைப்புகள் பற்றி ஆங்கிலத்தில் சொல்லப்படும் ஒரு பதம். Exile எனும் பதம் எப்போதுமே ஐரோப்பியர் அல்லாதவர்களை அவர் படைக்கும் இலக்கியங்களைத் தனி வகைக்குள் அடையாளம் காணும் மேற்கத்தைய அணுகுமுறையின் அங்கம். எத்தனை தலைமுறையாக ஆசியன்/ ஆப்ரிக்கன்/ இலத்தீன் அமெரிக்கன் ஐரோப்பிய நாடுகளில் இருந்தாலும் அவர் படைக்கும் இலக்கியங்கள் தேசிய இலக்கியங்கள் ஆவதில்லை.

உதாரணமாக English literature என்பதற்கான வரையறை என்ன? Commonwealth literature என்பதற்கான வரையறை என்ன?

English Literature இங்கிலாந்தில் எழுதப்படும் இலக்கியம். Commonwealth literature பழைய ஆங்கிலேய காலனிய நாடுகளில் ஆங்கிலத்தில் எழுதப்படும் இலக்கியம்.

ஆங்கிலத்தில் எழுதப்பட்டாலும், ஆங்கிலம் என்ற வகைக்குள் இவ்விலக்கியங்கள் வருவதில்லை. காரணம் ஆங்கில மொழியின் Imperial வடிவங்களுக்குள் விஷயங்களுக்குள் இவை வருவதில்லை. ஆங்கில இலக்கியம் உயர்வானது. மையமானது. முதலானது. ஆதியானது. பாதிப்பைத் தரத்தக்கது.

Exile literatureஉம் சரி, Commonwealth literatureஉம் சரி, Afro American literature/ British Asian literature/ French African literatureஉம் சரி உலகின் Mainstream literature இல்லை. எப்போதுமே இவை இரண்டாம் கட்டமான, மற்ற (other) இலக்கியங்கள்தான்.

இப்போது கோட்பாட்டு அடிப்படையில் புலம்பெயர் இலக்கியத்துக்கும் காலனியாதிக்கத்துக்கும் அறிவுத் தளத்தில் நிலவும் முரண்பாட்டையும் பதட்டத்தையும் (Tension) ஒருவர் உணரமுடியும். ளைவு உணர்வுதான்.

புலம்பெயர் இலக்கியங்கள் ஒரே சமயத்தில் மூன்றாம் உலக உணர்வு வெளியிடுவதாயும் காலனியாதிபத்தியத்தை Assimilate பண்ணுவதாயும் இருக்கிறது.

உலக அளவில் பேசப்படும் பெரும்பாலான இலக்கியங்கள் இத்தகைய வரையறைக்குள் வருகிறது. ஸல்மான் ருஷ்டி, நைபால், சிநுசு அச்சேபா, டோனி மொறிசன் போன்றவர்களின் படைப்புகள் காலனியாதிக்கத்தை விமர்சிக்கும் சுய அடையாளத்துக்கான படைப்புகள்.

இல்மஸ் குணே, ஸொலானாஸ், மரியா பம்பர்க், ஹெல்வே, ஜெரிமா போன்றவர்களில் ஆப்ரிக்க/ அரேபிய/ இலத்தீன் அமெரிக்க சமூகங்களைப் பற்றிப் பேசப்பட்ட படங்களெல்லாம் புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்துதான் வந்தன. சொந்த நாட்டில் படமெடுக்க முடியவில்லை. செம்பேன் படங்கள் செனகலில் தடை செய்யப் பட்டன.

புலம்பெயர்வு இலக்கியம் பற்றிய எதிர்மறையான தாக்குதல்கள் ஈழத்தில் இருந்தும் தமிழ்நாட்டில் இருந்தும் வருகின்றன. புலம்பெயர் இலக்கியம் புலன்கள் பெயர்ந்த இலக்கியம் என்றும் திரிபுவாத இலக்கியம் என்றும் மேட்டுக்குடி இலக்கியம் என்றும் புலம்பல் இலக்கியம் என்றும் சொல்லப் படுகிறது.

பங்களாதேஷ் எழுத்தாளர்கள் எழுதும் கவிதைகள் பாகிஸ்தான் எழுத்துகள். சுஜாதாபட் போன்றவர்களின் கவிதைகள்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஹனிப் குரேஷியின் நாவல்கள், ருக்ஸேனா அகமத் தொகுத்த படைப்புகளை ஒருவர் மேட்டுக்குடி இலக்கியம் என்றோ புலம்பல் இலக்கியம் என்றோ சொல்வது அநியாயம். உயிர்வாழ்தலுக்கும் அடையாளத்துக்கும் போராடும் எதிர்ப்புக் குரல்களை அதில் கேட்கலாம். படைக்கப்பட்ட அற்புதமான குர்திஸ் கவிதைகள் அனைத்தும் வெளிநாடுகளில் வாழும் குர்திஸ் கவிஞர்களால்தான் படைக்கப் பட்டன.

புலம்பெயர்ந்த இலக்கியத்திலும் கூட வெளிப்படும் குரல்களின் தொனியும் அரத்தமும் வர்க்கச் சார்புக்கும் ஜாதீயச் சார்புக்கும் ஏற்பவே வெளிப்படும்.

கீதா பென்னட் போன்ற அமெரிக்க வாழ் தமிழ் எழுத்தாளர் எழுதும் ஆனந்த விகடன்/ கல்கி நாவல்களைப் புலம்பெயர் இலக்கியம் என்று கருதிக் கொள்பவர்கள், புலம்பெயர் நாட்டில் வாழ்பவர்கள் சுகபோகமான வாழ்க்கை வாழ்கிறார்கள்

## இப்படியும் விளம்பரங்கள்!

ஒரு பொருளின் விற்பனை அதிகரிப்பிற்கு விளம்பரம் அவசியமானது. விளம்பரத்தால் மாத்திரம்
முடியாதபோது சில நிறுவனங்கள் பொருளை வாங்குபவர்களுக்குச் சில சலுகைகளை அறிவிப்பது
வழக்கம். இதன் விளைவுதான் குமுதம் பத்திரிகையில் இலவச ஷாம்பூ இணைப்பு பற்றிய விளம்பரம்.
பத்திரிகை விற்பனையை அதிகரிப்பது கடினமாகும்போது, பத்திரிகைகள் வாசகர்களைக் கவரச்
சகல உத்திகளையும் கையாள்கின்றன. முக்கியமான செய்திகளை மற்றப் பத்திரிகைகட்குக்
கிடையாது செய்வது முதல் பொய்யான செய்தி வெளியிடுவது, செய்தியைத் திரித்து வெளியிடுவது
போன்ற நடவடிக்கைகளில் அவை ஈடுபடுவது உலகெங்கும் உள்ள வழக்கம்.
சலுகை அறிவிப்பில் உச்சம் எது என்பது எவரும் கூறமுடியாதது. ஆனால் அண்மையில்
துருக்கியப் பத்திரிகை ஊலே (Olay ) தனது பத்திரிகையைத் 99தினங்கள் தொடர்ந்து
வாங்குவோருக்கு இடுகாட்டில் இலவசமாகக் கல்லறைக்கான இடத்தை வாங்கித் தருவதாக
வாக்களித்தது. துருக்கியப் பத்திரிகைகள் பலவும் கடும் போட்டியுடன் வெளிவருவதற்கு இது ஒரு
உதாரணம்தான். இன்னொரு பத்திரிகையான அக்ஸாம் ( Aksam ), ஒரு வருடத்தில் தனது 365
இதழ்களை(யும்) வாங்குவோருக்கு இலவசமாகத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்குவதாக
அறிவித்தது. இரண்டு லட்சமாக இருந்த அதன் விற்பனை பத்து லட்சமானதில் யாரும்
ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.
அமெரிக்காவில் ஒரு வானொலி நிலையம் செய்தது இதையொத்த பைத்தியக்காரத் தனமான
செயலைச் செய்தது. 1937ல் கட்டப்பட்ட நாளில் இருந்து இந்த மே மாதம் வரை 990 பேர்வரை
சான்பிரான்சிஸ்கோவின் கோல்டண் கேற் பாலத்தில் இருந்து, பசுபிக் சமுத்திரத்தில் குதித்துத்
தற்கொலை செய்திருந்தனர். ஆயிரமாவது தற்கொலைக்குப் பரிசளிப்பதாகப் பகிரங்கமாக
அறிவித்தது வானொலி. ஒரு நபர் 1000வது நபராகத் தற்கொலையும் செய்துகொண்டார். அவர்
முன்பாகப் பரிசு பெற்றாரா என்பது தெரியவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்று கருதுபவர்கள், சொந்த மக்களைப் பற்றிக் கவலைப்படாத எழுத்தாளர்கள் என்று கருதுபவர்கள், சொந்த நாட்டின் அரசியல் கடமைகளை மறந்துவிட்டுச் சென்றவர்கள் இவர்கள் எனக் கருதுபவர்கள் மட்டும்தான் இம்மாதிரியான தாக்குதலைப் புலம்பெயர் இலக்கியவாதிகள் மீது தொடுக்கிறார்கள்.

சுகபோகமாக வாழ்பவர்கள் போலிப் பெருமைக்காரர்கள், புத்தகப் புழுக்கள், ஏட்டுச் சுரைக்காய்கள் எவருமே புலம்பெயர் இலக்கியம் படைப்பதில்லை. ICMA/ MBA படிக்கிறவன் எவனுக்கும் இங்கு New Economist வருவது தெரியாது. சட்டம் படிக்கிற எவனுக்குமே இங்கு Criminal Justice Billக்கு எதிரான போராட்ட இயக்கம் இருப்பது தெரியாது. Engineering படிக்கிற எவனுக்குமே Alternative Science வருவது தெரியாது.

இவர்களை ஞாபகம் வைத்துக் கொண்டு புலம்பெயர் இலக்கியம் படைப்பவர்களை எதிர்மறையாகப் பார்ப்பது அபத்தம். இங்கே புலம்பெயர் இலக்கியம் படைப்பவன் பேக்கரியில் வேலை செய்கிறான். லாண்டிரியில் வேலை செய்கிறான். காய்கறிக் கடையில் வேலை செய்கிறான். ஓட்டலில் தட்டுக் கழுவுகிற வேலை செய்கிறான். சொந்தக் காசு போட்டுத்தான் சிறுபத்திரிகை நடத்துகிறான். வந்த சமூகத்தில் ஒடுக்கப்பட்டவனாக, சுரண்டப் பட்டவனாக, எதிர்ப்புணர்ச்சி உள்ளவனாக, சமூகப் பிரக்ஞை உள்ளவனாக எவன் இருந்தானோ அவனே இங்கு தமிழ்ப் புலம்பெயர் இலக்கியம் படைக்கிறான்.

பார்த்தீபன், சுசீந்திரனின் கதைகள், ராஜேஸ்வரியின் நாவல்கள், சுகனின் கதைகள், கலாமோகனின் கதைகள் (இவரது Non fictions மிக மோசமான பாலுறவு ஆதிக்க எழுத்துகள்), இளவாலை விஜயேந்திரனின் கவிதைகள் எல்லாம் அசலான அனுபவங்களை வெளியிடுபவை. இவை எதுவும் வந்த இடத்தில் ஆதிக்கத்துக்குத் துணை போனவை அல்ல. இப் படைப்புகள் நிறவெறி பற்றி பாலுறவு ஆதிக்கம் பற்றி ஐரோப்பிய சமூகத்தின் பாரபட்சம் பற்றிப் பேசுகிற படைப்புகள். இவர்கள் கவிதைகளில் வருகிற செர்ரிப் பழங்களும், அப்பிள்களும், அணில் கடித்த பிச்சைக்காரனின் கையிலிருக்கும் யாரும் சீந்தாத மரத்தில் இருந்து உதிர்ந்த கனிகள்.

புலம்பெயர்ந்து வந்ததற்கான காரணங்களாக ஆயிரம் காரணங்கள். துருக்கியில் ஈரானில் ஈராக்கில் மார்கஸிஸ்ட்டுகளுக்குத் தடை. கொலைத் தண்டனை. குர்திஸ்தானில் உயிரோடு கொல்வர். தென் கொரியா, சீனாவில் மாற்றுக் கருத்து பேச முடியாது. செத்துக் கொண்டிருக்கும் முழுக் குடும்பத்தையும் காப்பாற்றவும் உயிர் தப்பவும் ஓடி வருகிறான் . சிலி நாட்டில் இருந்து. விடுதலைப் போராட்டங்களும் காலனியாதிக்கமும் மனிதர்களை அலைக்கழித்துப் போட்டிருக்கிறது.

புலம்பெயர்ந்த எழுத்தாளர்கள் தாய்மண் குறித்த ஏக்கம் கொண்டவர்கள். தமக்குத் தாமே சித்திரவதை செய்து கொள்பவர்கள். வாழ்வை அரத்தமுடன் வாழ முயல்பவர்கள். மூன்றாம் உலக மனிதனின் விடுதலை உணர்ச்சியையும் நவீன காலனியாதிக்கத்திற்கு எதிரான பதட்டத்தையும் வெளியிடும் எழுத்துகள் அவர்களுடையவை. தமிழில் இது இப்போதுதான் தளிர் விட்டிருக்கிறது. நீர் விடுங்கள். கருக்கி விடவேண்டாம். காலம் கொடுங்கள். அவன் ஐரோப்பாவைத் தரப் போவதில்லை. அல்ஜீரியனைத் தருவான். கறுப்புப் பெண்களின் உலகைத் தருவான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆப்ரிக்க விக்ரகங்களை, மச்சுபிச்சு மலைக் கற்களைத் தருவான். ஐரோப்பியப் பசப்பினால் மூடுண்டு கிடக்கும் உங்கள் மூளைக்குப் புதிய புதிய பிரதேசங்களை அவன் திறந்து கொடுப்பான்.

இங்கு இன்னொரு விஷயம். எதிர்பார்ப்புகள், இலக்குகள் இருக்கிற அளவுக்கு இங்கு முயற்சிகள் செயல்கள் குறைவாகத்தான் இருக்கின்றன. ஆயிரம் வாசல்கள் திறந்து கிடக்கிறது. புதிது செய்பவர்கள் குறைவு. தேடிப் படிப்பவர்கள் குறைவு. தம்தம் துறையில் பங்களிப்பு செய்ய வேண்டும் எனும் எத்தனம் குறைவு. கொஞ்சநேரம் தனியாய் இருந்தால் கவிதை எழுதி விடுகிறார்கள். பிரதானமாக படிப்பதற்கு இங்கு குவிந்து கிடக்கையில் படிப்பவர்கள் குறைவு. எல்லாவற்றிலும் அரசியல். ஏதேனும் ஒரு குழு சார்ந்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம். சுயாதீனமாக இருப்பவன் மீது அவதூறுகள். கலை இலக்கிய அபிப்பிராயங்களை குழு இருக்கும் தைரியத்தில் தனிநபர் சச்சரவாக்கும் அறிவுலக நபும்சகத் தனம், ஐரோப்பிய மையத்தின் உதிரிகளாக மூளைகள். படிப்பு. படைப்பு தேர்வுகள். புலம்பெயர்ந்த சூழல் நிறையச் செய்வதற்கும் படைப்பதற்கும் ஆன சூழல். கோஷங்கள் கூச்சல்கள் இருக்கிற அளவுக்கு சிருஷ்டிகள் வரவில்லை.

அரசியலுக்கான களம் இங்கு இலக்கியம். இலக்கியம் பற்றிய சர்ச்சைகள் அரசியலாக்கப் படுகிறது. சினிமாகூட தற்காலிக அரசியல் நிலைப்பாடு எடுக்க வேண்டுமென நிர்ப்பந்திக்கப் படுகிறது. சினிமா ஒரு தளம். இலக்கியம் ஒரு தளம். ஓவியம் ஒரு தளம். அரசியல் படிப்பு ஒரு தளம். அந்தந்தத் தளத்தில் என்ன சாதனைகள் நிகழ்ந்திருக்கிறது?

பிற புலம்பெயர்ந்த மொழிகளோடு/ படைப்புகளோடு ஒப்பிடத் தமிழில் படைப்புகள்/ சாதனைகள் ஏதும் இல்லை. வண்ணநிலவன் சொல்கிற மாதிரி ஈழத்து இலக்கியம் மட்டுமல்ல, புலம்பெயர் இலக்கியமும் தனது அரசியலுக்காக ஏதேனும் கசாயம் குடிக்க வேண்டும். புலம்பெயர் இலக்கியம் பற்றிக் கவலைப் படுபவர்கள் சாதனை செய்ய உழைக்க வேண்டும். கடுமையான எதிர்மறையான விமர்சனங்கள் வைப்பவர்கள் யோசிக்க வேண்டும்.

## நோர்வேக் கிண்ணம் (NORWAYCUP)

வருடந்தோறும் ஒஸ்லோவில் N.S.L.A யினரால் நடாத்தப்படும் 11 பேர் கொண்ட ஐரோப்பா ரீதியிலான நோர்வேக் கிண்ணத்திற்கான சுற்றுப்போட்டி 12.08.95 அன்று நடைபெற்றது. இச்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் நோர்வேயைச் சேர்ந்த தமிழ் விளையாட்டுக்கழகமும் (T.S.C) லெவண்ஸ்ரார்ஸ் (11 STARS) விளையாட்டுக்கழகமும் பங்குபற்றின. போட்டியில் 1-0 என்ற கோல் அடிப்படையில் நோ.த.வி.க வெற்றிபெற்றது. T.S.C இரண்டாவது தடவையாக இச்சுற்றுக்கிண்ணத்தை வெற்றியீட்டிக்கொண்டது குறிப்பிடத் தக்கது. 3ம் இடத்தை ப்ளூஸ் (BLUES) வி.க பெற்றுக்கொண்டது. இப்போட்டியில் த.வி.க சேர்ந்த தவராசா சிறந்த விளையாட்டு வீரராகவும் சிறந்த பந்துகாப்பளராக யூஜின் என்பவரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இச்சுற்றுப்போட்டியில் டென்மார்க்கில் இருந்து வந்து கலந்து கொண்ட கழகங்கள் உட்பட ஏழு கழகங்கள் பங்குபற்றின. பங்குபற்றிய கழகங்களிற்கு நினைவுக் கிண்ணங்கள் வழங்கப்பட்டது.

தொகுப்பு: மஹி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிறந்து 73475 நாட்களுக்குப் பிறகிய இரவில்

ஏஎம்.றஸ்மி

வானம் முழுக்கவுமே வெள்ளிகள்;
பூவும் பிஞ்சுங்காயுமாய்.
மேய்ச்சலுக்காயொரு வெண்மேகமாச்சும் வாராததில்
வீணாய் விழுந்தெங்கோ தொலைந்துபோகுமொரு பழுத்த வெள்ளி.

நுரையெழும்ப நுரையெழும்பக் கரையுடைக்கும் அலையினொலியோடு
பெயர்தெரியாப் பூச்சியொன்றும் இசையமைத்த
இவ்விரவின்பால் லயிப்புற்று,
வெற்றிடத்துள் திணித்தென்னை மூச்செடுக்கச் சொன்ன இன்றின்
நெருக்குவாரத்துள் மறந்து,
உள்ளங்கையிரண்டிலும் தலையைப் பாரமேற்றி
அடம்பன்கொடி படர்ந்து மண்மறைந்துபோன குருத்துமணற்பரப்பில்
வானிற்கு முகங்காட்டிக் கிடந்தேன்.

கறுத்தவானிடை
பின்னோடே விழியிழுத்து
எலும்புந்தோலுமாய் மெலிந்துபோயிருந்த நிலவையும்.
மனமோ எங்கோ போயிருக்கும் இங்கின்றி.

பிறகெழுந்து
ஊரிகளுஞ் சிப்பிகளும் நொறுங்கிக் குத்தியுறுத்த
உப்புக்கரிக்கும் என்னுதட்டை நக்கிச் சுவைத்தபடி
இருட்டில்,
கஞ்சாச்சுருட்டை உறுஞ்சிநன்றே உள்ளிழுத்ததில்
புகையால் புரையேறித்தவித்த அவ்வுருவத்தையும் கடந்து
வழிநெடுகிலும்
நடைபழகி நடைபழகித்திரிந்து
நான்வர
வெட்கித்தோடி ஒளிகிற பல நூறு நண்டுகளையும் விழிமேய
ரசித்து நடந்தேன்.

மாவரியால் அரிந்துவருகிற மழைத்துகள்களை
அள்ளிவந்து விசிறுகிறது காற்று.
இப்போ,
வீடிருக்குந்திக்காய் எனது சைக்கிள் ஓட
நுரையெழும்ப நுரையெழும்பக் கரையுடைத்த அலையினொலி
தூரமாய்க் கேட்கிறது.

மெல்ல மீள்கிறேன் இங்குநான்.
இனி,
கவலையுங்கக்கிசங்களும் மனமுடைக்கத்துவங்குகின்றன
என்.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழகப் பார்ப்பனீயம்




## இந்தியாவின் நாஸியிசமே பார்ப்பனீயம்; ஐரோப்பியப் பார்ப்பனீயமே நாஸியிசம்

ஒரு சில மாதங்களுக்குமுன், "துக்ளக்" இதழில் ஆசிரியர் கருத்தாக, அதன் ஆசிரியர் சோ (ராமஸ்வாமி) "இந்திய இராணுவம் ஈழத்தமிழ் பெண்களின் மீது பாலியல் வதை புரிந்ததாக எந்த நீதிமன்றம் தீர்ப்பளித்தது?" என்று கேட்டிருந்தார்.

இது பார்ப்பனீயம்.

இரண்டாம் உலகயுத்தத்தில் யூதர்களின் மீது ஜேர்மனிய நாஸிகளால் நடாத்தப்பட்ட குரூரப் படுகொலைகளை உலகம் இன்னும் மறக்கவில்லை. ஆனால் "இக்கொலைகள் உண்மையில் நடக்கவேயில்லை, அது வெறும் பொய்" என்று ஐரோப்பிய, வட அமெரிக்க நாடுகளில் இப்போது ஒரு கொடிய பிரச்சாரம் நடாத்தப்பட்டுவருகிறது.

இது (புதிய) நாஸியிசம் (Neo) (Nazism).

பார்ப்பனீயம் என்றால் என்ன?, நாஸியிசம் என்றால் என்ன ? என்ற அறிமுகத்துக்கு சுருக்கமான பதிலாக இவ்விரு சமகால உதாரணங்கள் அமையும்.

சோ-வின் கேள்வியிலும், நாஸிகளின் பிரச்சாரத்திலும் பொதிந்துள்ள அதிகாரத் திமிரையும், ஆணவத்தையும்,

www.tamilarangam.net

அயோக்கியத்தனத்தையும், குரூரத்தையும், இவ்விரண்டிலும் காணப்படும் ஒற்றுமையையும் ஒருவரால், அதிலும் குறிப்பாக மேற்குலகில் வாழும் ஈழத்தமிழரால் இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும் என்று கருதுகிறேன். என்னைப் பொறுத்தவரையில், இந்தியாவின் நாஸியிசமே பார்ப்பனீயம்; ஐரோப்பியப் பார்ப்பனீயமே நாஸியிசம்.

நாஸியிசம் போற்றும் ஆரிய இனமரபும், ஸ்வஸ்திகா சின்னமும் பார்ப்பனீயத்தாலும் போற்றப்படுகின்றன. ஹிட்லரை அழித்தல் கடவுள் விஷ்ணுவின் அவதாரமாகக் கண்ட பார்ப்பனீயம், நாற்பதுகளில் ஆங்கிலேயரை ஹிட்லர் தோற்கடித்து இந்தியாவைக் கைப்பற்றிவிடுவானென்ற நம்பிக்கையில் ஜேர்மனிய மொழியைப் பயின்று நாஸிகளை வரவேற்கக் காத்திருந்தது. அந்நோக்கம் நிறைவேறாது போனாலும் இன்றுவரை இந்தியாவில் இந்து மதம், இந்திய மேலாதிக்கம், சாதீயம் என்று பல்வேறு வடிவங்களில் நாஸியிசத்தை, பார்ப்பனீயம் பராமரித்து வருகிறது. ஜேர்மனியிலும், ஏனைய பல மேற்கு நாடுகளிலும் ஸ்வஸ்திகா சின்னம் பயன்படுத்துவதை அரசாங்கங்கள் தடை செய்யப்பட்டபோதும், இந்தியாவில் அது வணங்கப்பட்டு வருகிறது.

பார்ப்பனீயம், நாஸியிசம் இரண்டுக்குமே அடிப்படையாக இருக்கும் நச்சுக் கொள்கையென்னவெனில் மனிதர்களில் ஒரு குறிப்பிட்ட பிரிவினர், அதாவது ஆரிய மரபினர் **(Aryan race)** உயர்ந்தவர்கள்; ஏனையோர் ஆரிய மரபினரால் அடக்கியாளப்படுவதற்குப் பிறந்தவர்கள் என்று இவ்விரண்டும் கருதுகின்றன. ஆரிய மரபினர் பிறப்பால் அறிவாற்றல் மிகுந்தவர்கள் என்றும், இம்மரபினரது மொழி (சமஸ்கிருத அடிப்படையிலமைந்த இந்தோ-ஆரிய மொழிகள்), கலாச்சாரம் என்பன எனைய மக்களினது மொழி, கலாச்சாரம் என்பவற்றைவிட உயர்வானவை என்றும் இவைகள் வலியுறுத்துகின்றன. இந்த மேலாதிக்க உணர்வினைக் கூர்மைப்படுத்துவதன் மூலமே ஜேர்மனியர்களை நாஸிகளாக மாற்ற ஹிட்லரால் முடிந்தது. ஆரியரல்லாத அனைவரையும் அழித்துவிடவேண்டும், அடிமைப்படுத்த வேண்டும் என்ற வெறியுடன் உலகத்தை மிரட்டும் மூன்றாவது இராச்சியத்தை **(Third Reich)** நிறுவமுடிந்தது.

ஜேர்மனி நாஸியிசத்தைப்போல் பெரும்பான்மையினரைக் கொண்டதாயல்லாமல், மிகச் சிறுபான்மையிரைக் கொண்ட இந்தியப் பார்ப்பனீயம் தனது மேலாதிக்கத்தை நிறுவ பயன்படுத்தும் உத்திகளில் மிக முக்கியமானது இந்து மதமாகும். பல்வேறு தேசீய இனங்களையும், அவற்றின் நிலங்களையும் இணைத்து இந்தியாவை ஒரு நாடாக நிர்வகிக்க ஆங்கிலேயருக்கு துப்பாக்கியே துணையாக இருந்தது. சுதந்திரத்தின் பின்னர் ஆங்கிலேயரின் துப்பாக்கியின் ஸ்தானத்தில் இந்துமதம் ஏறி அமர்ந்து, காஸ்மீரை மிரட்டி, பாபர் மசூதியை உடைத்து இந்தியாவை நடாத்துகிறது. இன்னொரு வகையில் சொல்வதானால் இந்து மதத்தையும், அதன் மூலமாக இந்தியாவையும் பார்பனீயமே நடாத்துகிறது. நாஸியிசம், பார்ப்பனீயம் இரண்டுமே ஒன்றுதான் என்ற போதும் நாஸியிசம் போன்று மூர்க்கமாக நடந்துகொண்டு குறுங்காலத்திலேயே தன்னை அழித்துக்கொள்ளும் முட்டாள்தனம் பார்ப்பனீயத்துக்கு இல்லை. அது பல்வேறு

www.tamilarangam.net

காலகட்டங்களில் நிகழும் பல்வேறு சமூக, வரலாற்று ஓட்டங்களின் விசைக்கேற்ப வளைந்து கொடுத்து என்றும் இறவாமல் வாழும் வல்லமையைக் கொண்டது. இந்தியா ஒரு ஆரிய தேசம்; இந்துத்துவம் அதன் மதம்; இந்தி அதன் மொழி என்ற கோட்பாடே பார்ப்பனீய அரசியலின் அடிப்படையாகும். அவ்வப்போது சில தடைகள் வந்தாலும் தனது அரசியற் குறிக்கோளை நோக்கி பார்ப்பனீயம் நிதானமாக நகர்ந்துகொண்டே இருக்கிறது. பாரதீய ஜனதாக் கட்சி, சிவசேனா, விஷ்வ ஹிந்து பரிஷாத், ராஷ்திரீய சேவா சங்கம் (ஆர்.எஸ்.எஸ்) போன்ற இந்துமத வெறியர்களின் அமைப்புக்கள் இன்று இந்திய அரசியலில் பெற்றுவரும் செல்வாக்கு பார்ப்பனீய அரசியல் வெற்றியின் அடையாளங்களே.

பார்ப்பனீயம் கூர்மையானது; சாதுரியமானது. அது தமிழ் நாட்டில் தமிழ் பேசியபடி, கர்நாடகந்தில் கன்னடம் பேசியபடி, கேரளாவில் மலையாளம் பேசியபடி இந்தி மொழியின், இந்து மதத்தின் நலன் காக்கிறது. எல்லா மாநிலங்களிலும் அது அரசியலை நேரடியாகவோ அல்லது மறைமுகவாகவோ வழிநடத்துகிறது. எல்லா மாநிலங்களிலும், மக்களின் சிந்தனைகளை பதப்படுத்தும் தொடர்பு சாதனங்கள், கல்விமுறைகள் போன்றவற்றை பார்பனீயமே வழிநடாத்துகிறது. இந்தியாவின் ஒருமைப்பாடென்பது இந்தி, இந்துத்துவம் அகியவற்றின்மூலமே சாத்தியமானதென்ற கருத்தை வளர்த்தெடுப்பதில் முன்னிற்கிறது.

இந்திய பார்பனீயத்தின் தமிழகப் பிரிவான தமிழகப் பார்ப்பனீயம் நமது கைக்கெட்டிய தூரத்திலுள்ள பெரும் ஆபத்து. இது பற்றி அடுத்த இதழிலும், ஈழத்தமிழரையும், தமிழீழப் போராட்டத்தையும் தமிழகப் பார்ப்பனீயம் ஏன் விரோதம் வழியப் பார்க்கிறது என்பதை அதன் பின்னரும் பார்ப்போம்.

**-அன்பரசன்.**

**வசந்தகாலம் 94 பாரிஸ்**

**சுகன்**

*அம்பலப்பட்டுப் பிதற்றுகிறார்*
*முடிமறைத்து விடுகிறார்*
*பச்சைத் துரோகி*
*பிழைப்பு வாதி*
*கைக்கூலி*
*உங்களின் வாக்க இருப்பைத் தகர்ப்போம்*
*வாந்தி எடுக்கிறார்*
*குருசேவ் டெங் கும்பல் வாரிசுகள் (உங்களைப் போன்றவர்கள்)*
*புதைகுழிக்கு அனுப்ப முயல்கின்றனர்*
*நரித்தனமானது*
*கோமாளித்தனமான செயற்பாடு*
*பித்தலாட்டம்*
*தப்பிச் செல்ல வேண்டாம்*
*முத்திரை குத்துகிறார்*
*திரிபை திணிக்க முயல்கிறார்*
*வரலாற்றைப் புரட்டி விடுகிறார்*
*முதலாளித்துவ குட்டி பூர்ஷ்வா அடிவருடி*
*பாசிச பேட்டை ரவுடி*
*கதம்பக் கூட்டமே!*
*சேறடிக்க முயல்கிறார்*
*வக்காலத்து வாங்குகிறார்*
*எந்த ஏகாதிபத்தியம் உங்களுக்குப் பணம் தந்தது?*
*தமது வர்க்கத் தன்மையைக் காட்டிவிடுகின்றார்*
*குழிதோண்டிப் புதைக்க முயல்கின்றனர்*
*மாக்ஸியத்துக்கெதிராகத் தனது தாக்குதலைத் தொடுத்துள்ளார்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுவடுகள்

தமிழர்கள் இன்று உலகெங்கும் பரந்து வாழ்கின்றனர். ஈழத்தில் இருந்து சிதறி உலகின் எல்லாத் திசைகளிலும பரவிவிட்ட தமிழ் மக்களுக்குத் தாய்நாட்டில் மறுக்கப்பட்ட சில உரிமைகளாவது ஏனைய நாடுகளில் கிடைக்கின்றன. இவை உண்மையில் போதா என்பதுடன், இதற்கும் அதிகமான உரிமைகள் அகதிகளுக்கு இருக்க வேண்டும் என்பதே உண்மை. இதுபற்றிப் போதிய அறிவுகூட எம்மிடம் இல்லை. இவ்வாறு சலுகைகள் போல வழங்கப்படும் உரிமைகள் சிலவற்றில் வாக்குரிமையும் ஒன்று.

நோர்வேயைப் பொறுத்தவரை மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக இங்கு வசித்த எல்லா வெளிநாட்டவர்களும் உள்ளூராட்சி, மாகாணத் தேர்தல்களில் வாக்களிக்க உரிமை உடையவர்கள். பொதுவாகவே வாக்களிப்பு குறைவாக உள்ள நோர்வேயில், வெளிநாட்டவர்கள் வாக்களிப்பிற் கலந்துகொள்வது மிகக் குறைவு. இதற்கு முதற் காரணம் தமது சூழல் பற்றி இங்கு வாழும் வெளிநாட்டவர் பலரிடையே போதிய தகவல்கள் இல்லை என்பதுடன் பலரது அக்கறையின்மையும் காரணமாக உள்ளது.

இலங்கையில் தேர்தல்கள் நிகழும் கேலிக்கூத்து முறைகளைப் பார்த்தும் கேட்டும் அறிந்த எம்மிற் பலருக்கு இந்தத் தேர்தல்கள் அதிக அக்கறையைத் தூண்டாமல் இருக்கக் கூடும். அங்குபோன்று பத்து வாக்குகளுக்கும் குறைவாகப் பெற்றவர்கள் ஆட்சியில் அமர்வது போன்ற சந்தர்ப்பங்களும், ஒருவருமே வாக்களிக்க முடியாத இடங்களின் வாக்குச் சாவடிகளில் ஆயிரக் கணக்கான கள்ள வாக்குகள் இடப்படுவதும் போன்ற சந்தர்ப்பங்கள் இங்கு ஏறத்தாழ இல்லை. இந்நிலையில் தேர்தல் சரியான மக்கள் பங்களிப்பில் நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


தமிழ் மக்களும் சரி, ஏனைய வெளிநாட்டவர்களும் சரி தம்மைப் பாதிக்கும் விடயங்கள் யாரால் எவ்வாறு தீர்மானிக்கப் படுகின்றன என்பதை அவதானிப்பதும், தமக்கு யார் உண்மையில் ஆதரவானவர்கள், யார் எதிரானவர்கள் என்பதைத் தெளிவாகக் கண்டுகொள்வதும் அவசியம். வெளிநாட்டார் நிறைந்த சூழலில் தேனொழுகப் பேசும் ஒரு கட்சியின் நடவடிக்கைகள் முழு இனவாதமாகக்கூட இருக்கலாம் என்பதைக் கவனத்தில் கொள்வது அவசியம்.


தேர்தல் இந்த நாட்டில்தானே நிகழ்கிறது; எமக்கும் இதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று நினைப்பது தவறு. நாம் வாழும் சூழலில் எம்மைப் பாதிக்கும் எல்லா விடயங்களிலும் நாம் கவனமாக இருத்தல் அவசியம். நாம் வாக்களிக்காமல் இருப்பது இனவாதிகளின் கை ஓங்க உதவக்கூடும்; வெளிநாட்டார் தொடர்பாகக் கடுமையாகச் சட்டங்கள் இயற்ற உதவக்கூடும்; இப்போதுள்ளது போன்று அகதிகளை மனிதாபிமானமற்ற ரீதியில் நடாத்த உதவக்கூடும். இவற்றை எமது வாக்குகள் முற்றிலும் மாற்றிவிடும் என்று நம்புவது சிரமமானது. ஆனால் எம்மால் இந்த வழியிலான முயற்சியும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தமிழர்களது வாக்குகள் நாடு தழுவிய ரீதியில் சில ஆயிரங்களே எனினும், தமிழருக்கு ஆதரவாக நடந்துகொள்ளும், இனவாதத்தை எதிர்க்கும், தற்போதைய அகதிக் கொள்கையை எதிர்க்கும் கட்சிகளுக்கு அவை மிகப் பயன்தரக்கூடும். எமக்குக் கிடைக்கின்ற சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி எமது குரலை வெளிக்கொணர்வோம்.

சுவடுகள் 69,
ஆடி 1995.

Suvadugal, A Tamil monthly from Norway, Issue nr 69, July'95





1.
உன் வழி எது?

2.
## கவிதையின் நிறம்

பார்ப்பதற்கு முள்ளானாலும்
பழகிவிட்டால் பூத்துவிடும்
கவிதைகளுக்கும் நிறமுண்டு -
பழுப்பு சாமியார்களுக்கும்

3.
## உறவுகள்

நீள் கடல் தாண்டி
விருந்தாட வந்தவர்களை
வீட்டுக்குள் சிறை வைத்தோம்,
தீண்டாதார் ஆக்கிட
திருடர்கள் என்றே
தினம் செய்தி போட்டோம்.
இனம் மானம் என்றெல்லாம்
எழுத்திலே காட்டி
உயிரினும் உயிராக வசனம் பேசி
ஒதுங்கிக் கொண்டோம்,
அல்லது

www.tamilarangam.net

www.tamilarangam.net

# கனிவண்ணன் கவிதைகள்

காலடிச் சுவடுகள்
காண்பது எப்படி?

எது உன் இடம்
எது என் இடம்
நீர்ப் பரப்பில்
எல்லைக் கற்கள்
அறிவது எப்படி?

அவரவர் வலை
விழுந்த இடம்
அவரவர் இடம்.
நேற்று எனது
இன்று உனது
நாளை யாரது?

தேவைக்கேற்ப
நேரத்திற்கேற்ப
எதுவும் சொந்தம்.
தரையிலும்
அப்படி ஓர்
தத்துவமிருந்தால்......

வெள்ளை எல்லாருக்கும்
இன்பம் தரும்;
மஞ்சள் கவிதைகளும்
சில நேரங்களில்
'எரிக்கா ஜோங்'கிடம் பூக்கும்;
கவிதையில் கருப்பும் உண்டு -
வியர்வை அழுக்கோடு
உட்கார்ந்திருக்கும், அது
குப்பை மேட்டில்.
கைநீட்டினால் ஓடிவரும்
உற்றுப் பார்த்தால் முறுவலிக்கும்,
பதிலுக்குச் சிரித்துவிட்டால்
கைகளை மெல்ல வருடும்,
தட்டிக் கொடுத்தால் தாவி ஏறி
நெஞ்சக் காயங்களை முத்தமிடும்,
சோர்ந்த் கால்களை நீவிவிடும்,
கைகளில் சூடேற்றும்.
தொலைதூரப் பயணத்திலும்
தோளிலே ஏறிவரும்
கவிக்குரங்கு
ஒரு தோழனைப் போல
எப்போதும்.


குருதியின் குருதி
'ஈ' குரூப் என்றும் 'தி' குரூப் என்றும்
சேராமல் பிரிந்தது.
எல்லா துயரங்களையும் சுமந்து
புறப்பட்டீர்.
வழியனுப்ப வார்த்தைகள் இல்லை.

வெண்புறாக் கூட்டமும்
செம்மறி ஆடுகளும்
சேர்ந்து மேயும் திடலில்
சோகமாய்ப் பாடுவான்
குரல் உடைந்த பாணன்.

www.tamilarangam.net

# ஜேர்மனியில் மீண்டும் நாசிஸம்! திரைப்படங்கள் காட்டும் யதார்த்தம்!!

ப.திருநாவுக்கரசு



கடந்த யூலை 31 முதல் ஆகஸ்ற் 7ம் திகதி வரை சென்னையில் உள்ள மேக்ஸ் முல்லர் பவனும், சென்னை பிலிம் சொசைட்டியும் இணைந்து பிலிம் சேம்பரில் ஒன்பது படங்களை வெளியிட்டன. எல்லா நாட்களும் அரங்கு நிறைந்திருந்தது. "The familier and the foriegn" என்ற தலைப்பில் இததிரைப்படங்கள் பற்றிய புத்தகமும் தந்தனர். அந்நூலில் இத்திரைப்படங்கள் எடுக்கப்பட்ட சூழலை விவரித்திருந்தனர்.

இத்திரைப் படங்கள் அனைத்தும் 1992 - 1994க்குள் எடுக்கப் பட்டவை. அதனால் 92 - 94ம் ஆண்டுகளில் நடந்த நாஜித் தாக்குதல்கள் கொடுக்கப் பட்டிருந்தன.

1992 மார்ச் 18ம் நாள் இரண்டு நாஜிகள் (Skinhead) லோவர் சாக்சன் நகரில் ஒரு மனிதனைச் சாகும்வரை அடித்து எரித்துள்ளனர். ஏப்ரல் 4ம் திகதி புகலிடம் தேடுவோரின் வீட்டை நார்த் ரைன் வெஸ்ட் பாலியா என்ற இடத்தில் எரித்தனர். 25ம் திகதி 21 வயது வியத்நாமிய இளைஞன் பெர்லின் மாஷான் வீட்டுவாரியத் திட்டம் இடத்தில் கத்தியால் குத்தப் பட்டான். போலீஸ் கேட்டதற்கு அவர்கள் கூறிய காரணம்: "அந்நியர்கள் அனைவரும் குற்றவாளிகள், மற்றும் என் இனத்தின் தூய்மைக்காகத் தாக்கினேன்" என்று சொன்ன அந்த ஜேர்மானியன் அதிதீவிர வலதுசாரிக் கட்சியைச் சேர்ந்தவன் என்று தெரிந்தது. யூலை 8ம் திகதி இரு முகமூடி நாஜிகள் ஒரு யூகோஸ்லாவிய குடிமகனை இறக்கும்படி தாக்கியுள்ளனர்.

ஆகஸ்ட் 22ம் திகதி வியட்நாமியர்கள் வசித்த வீட்டைக் கொளுத்திவிட்ட போது - எப்படியோ அவர்கள் உயிரோடு தப்பிவிட்டனர். செப்டம்பர் 26ம் திகதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பழைய யூத வசிப்பிடங்கள் உள்ள ப்ராடன்பேர்க்கில் அந்த நினைவிடத்தை எரியவிட்டனர். அக்டோபரில் இதேபோன்ற ஒரு நினைவிடமான பெர்லினுக்கு வெளியே உள்ள ராவன்ஸ்ரூக்கில் நடந்தது. நவம்பர் 12ல் வேலையற்ற வெளிநாட்டானை அடித்து எரித்தனர். இச்சம்பவம் நார்த்ரெய்ன் - வெஸ்ட்பாலின் நகரில் இரு "ஸ்கின்ஹெட்"டுகளால் நடாத்தப் பட்டது. நவம்பர் 23ம் திகதி ஸ்லேஜ்விக் - ஹால்ஸ்டெயின் நகரில் உள்ள மோல்ன்லில் இரு துருக்கிய இளம்பெண்களையும், அவர்களின் அம்மாவையும் வீட்டோடு வைத்துக் கொளுத்திய சம்பவம் நடந்தது. மீண்டும் இதே போன்றதொரு நிகழ்ச்சி சோலிங்ஙனில் 1993 மேயில் நிகழ்ந்தது. 1992ல் மட்டும் தீவிர வலதுசாரிகளால் 2,584 வன்முறைகள் நிகழ்த்தப் பட்டுள்ளன. இதில் 16பேர் இறந்துள்ளனர். 400பேர் காயப்படுத்தப் பட்டுள்ளனர். 1991ல் 1,483ஆக இருந்த வன்முறைகள் 1993ல் குறையத் தொடங்கியது. இவ்வாறு ஜெர்மனிய இனமே தலைகுனிய வைக்கும் நிகழ்வுகளைக் கண்டு அரசியல்வாதிகளும், அறிவாளிகளும் செய்வதறியாது திகைத்தபோதுதான், 1992ம் ஆண்டு நவம்பர் 8ம் திகதி குடியரசுத் தலைவர் றிச்சட் வான் வைஸ்சாகர் தலைமையில் மூன்று இலட்சம் மக்கள் மனித உரிமைக்கு எதிராக நடாத்தப்படும் தாக்குதல்களைக் கண்டித்து பெர்லின் சதுக்கத்தில் பெரும் ஆர்ப்பாட்டத்தை நடாத்தினர்.

1992ம் ஆண்டு ஜேர்மனியில் குடியுரிமை கேட்டு 4,38,000 பேர் விண்ணப்பித்திருந்தனர். அதில் ஐரோப்பிய நாடுகளில் இருந்து மட்டும் 1,10,000 பேர் விண்ணப்பித்திருந்தனர். ஜெர்மனிய அரசியல் சட்டம் 16ம் பிரிவு கூறுகிறது: "அரசியல் அகதிகள் புகலிட உரிமையை அனுபவிக்கலாம்" என்று. ஆனால் 80சதவிகித அகதிகள் குடியுரிமையே வேண்டும் என்கின்றனர். இப்படிப்பட்ட உரிமையை எந்த நாடும் தரமுடியாது என்கிறது ஜேர்மனி.

ஜேர்மனிய சமூகநலத்துறை அமைச்சர் இதுபற்றிச் சொல்லும்போது "ஜேர்மனியச் சட்டம் சொல்லும் காரணங்களுக்கு உட்பட்ட அரசியல் அகதிகளையே ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று கூறியதையடுத்து அகதி உரிமை கோரும் விண்ணப்பங்கள் குறைந்துவிட்டன.

புதிய நாஜிகளின் வன்முறைகளால் "ஜேர்மனியரின் விருந்தோம்பும்" பண்பு மீதே மக்களுக்கு வெறுப்புத் தோன்றிவிட்டது. வலதுசாரிகளின் வன்முறை இலக்கு, புகலிடம் தேடுவோர் மட்டும் அல்ல; யூதர்கள், இடதுசாரிகள், ஊனமுற்றோர், ஜேர்மனியிலேயே அமைதியை விரும்பும் ஜேர்மனியர் மற்றும் எல்லா வெளிநாட்டவர் மீதும் அவர்கள் பார்வை திரும்பி உள்ளது. இதுவல்லாமல் ஜேர்மனியச் சட்டமேகூட இனத்துவமானதுதான். எவ்வாறெனில் பிரான்சிலோ, அமெரிக்காவிலோ பிறந்த ஒவ்வொருவனும் அந்த நாட்டுக்காரனாவான். ஆனால் ஜேர்மனியிலோ குழந்தை ஜேர்மனிய ரத்தமா? என்ற கேள்வியைச் சட்டமே எழுப்புகிறது.

ஜேர்மனியிலே குடியேறிய பிறநாட்டவர் பல தலைமுறைகள் ஆனாலும் அவர்கள் ஜேர்மனியர்களாக ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை, அவர்கள் எவ்வளவு நல்ல ஜேர்மனி பேசினாலும்; தற்போது ஜேர்மனியக் குடியுரிமைச் சட்டத்தைப் பற்றி விவாதம் எழுந்துள்ளது.

www.tamilarangam.net

இவ்விவாதத்தில் உரத்த குரலை எழுப்பியுள்ளவர் குடியரசுத் தலைவர் வான்வெஸ்சாகர். 1993ம் ஆண்டு யூன் 3ம் திகதி நடந்த துயர நிகழ்வின் இறுதி நிகழ்ச்சியில் கொலோன மசூதியில் நடைபெற்றபோது தனது உரையில் அவர் கூறியபோது, "ஜேர்மனியில் வந்து குடியேறிவிட்ட இரண்டாவது மூன்றாவது தலைமுறையைச் சேர்ந்த வெளிநாட்டவர்களுக்கு "இரட்டைக் குடியுரிமை" தரலாமே" எனக் கூறியுள்ளார்.

இச் சூழ்நிலையில் வெளிவந்துள்ள ஒன்பது படங்களை இனிக் காண்போம்.

## ஹெர்ஸ்புருங் (HERZPRUNG)

ஹெர்ஸ்புருங் என்ற சிறுநகரில் ஜேர்மனி இணைக்கப்பட்ட போது தொழிற்சாலைகள் இயங்காததால் கேன்டீன்கள் மூடப்படுகின்றன. அதில் வேலை செய்யும் பெண்களும் வெளியேறுகிறார்கள். கதாநாயகியும் அங்கு வேலை பார்க்கிறாள். அவளுடன் பழகும் வயதானவள், கதாநாயகியின் தந்தையைக் காதலித்து அவர்கள் வீட்டில் குடியேறுகிறாள். ரஷ்யர்கள் எல்லைப்புறத்தில் இருந்து வெளியேறுகிறார்கள். அவர்கள் வெளியேறும்போது ஒரு ரஷ்யனிடம் இருந்து ஓவர்கோட்டை இலவசமாகப் பெறுகிறான், கதாநாயகனான அக்கோர்டியன் வாசிக்கும் நீக்ரோ.

அடுத்த காட்சியில் கதாநாயகியின் கணவன், முதலாளித்துவ உலகில் போட்டியிட்டு வாழ விருப்பம் இல்லாமல் தன் கால்நடைப் பண்ணையிலுள்ள மாடுகளையெல்லாம் கொன்றுவிட்டுத் தானும் சாகிறான். தன் நண்பியைப் பார்க்கக் காரில் பிள்ளைகளுடன் போகும்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கதாநாயகி, வழியில் நீக்ரோவையும் ஏற்றிக் கொண்டு தன் நகரில் விட்டுப் போகிறான். நகரில் இறங்கிய நீக்ரோ சுவரைப் பார்க்கிறான். "வெளிநாட்டவரே வெளியே போங்கள்" என்ற நாஜிகளின் கோசம்; சிரிக்கிறான். கதாநாயகியின் தந்தையும் பார்க்கிறார். பீர் வாங்கிக் கொடுங்கள் என்கிறான் நீக்ரோ, குடிவெறியில் தான் வழியில் கண்ட பெண்ணின் அழகைப் பற்றிச் சொல்கிறான். "நீ எனக்கு நண்பனாக இருககலாம், உறவினனாக முடியாது" என்று பெரியவர் சொல்லிவிட்டுப் போய்விடுகிறார்.

தன் நண்பியுடன் டிஸ்கோவுக்கு செல்லும் கதாநாயகி நீக்ரோவின் காதலில் விழுகிறாள். கதாநாயகியைக் காதலிக்கும் ஸ்கின்ஹெட் வம்பு செய்கிறான். கதாநாயகியின் நண்பி தான் வெளிநாடு செல்வதால் தன் பொருளை எல்லாம் கதாநாயகியை எடுத்துக் கொள்ளச் சொல்லித் தன் வீடியோ ரேப்பை அனுப்பி வைக்கிறாள்.

கதாநாயகியும் நீக்ரோவும் இணைந்து "கார் வீட்டில்" கேன்டீன் நடத்துகிறார்கள். கேன்டீனுக்கு "டாம் மாமா கேபின்" என்று பெயரைத் திரையில் காட்டுகிறார்கள். தொடர்ந்து ஸ்கின்ஹெட்டுகள் ரகளை செய்கிறார்கள். இறுதியில் ஸ்கின்ஹெட்டுகள் நீக்ரோவை மரத்தில் கட்டி வைத்துக் கொல்லப் போகிறார்கள். கேன்டீன் காருக்குத் தீ வைத்து விடுகிறார்கள். கதாநாயகி தப்பிவந்து நீக்ரோ நாயகனை விடுவிக்கும்போது நாயகியைக் காதலிக்கும் ஸ்கின்ஹெட், நீக்ரோவுக்கு வைத்த குறி நாயகியைப் பலிவாங்கி விடுகிறது. நாஜிகள் ஓடி வருகிறார்கள். வெளியூர் சென்றிருந்த நாயகியின் நண்பி நீக்ரோவைக் காப்பாற்றுகிறாள். படம் முடியும்போது "இது உண்மைச் சம்பவம்" என்ற தலைப்பில் முடிகிறது.

ஒன்பது படங்களில் முதன்மையானதாக இருந்த இப்படத்தை எடுத்தவர் ஹெல்கி மிஸ்ஸல்விட்ஸ் என்ற பெண் இயக்குனர். லைலா என்ற கவிஞர் எழுதிய "காதல் எந்தப் பாலைவனத்திலும் பூக்கும்" என்ற பாடல் சிறப்பாக இருந்தது. உண்மை நிகழ்ச்சியை எந்தவிதமான பிரசாரமும் ஆக்காமல் எடுத்திருந்த இயக்குனரைப் பாராட்டத்தான் வேண்டும். பார்க்கும் ஒவ்வொருவரையும் புதிய நாஜிகளிடத்தில் வெறுப்பைத் தோற்றுவிப்பதில் வெற்றி பெற்றுவிட்டார்.

* * * * * *

அன்றே பார்த்த இன்னொரு குறும்படம் சுடாகா (Sudaka). 12 நிமிடத்தில் தான் சொல்லவந்த செய்தியை இலக்கியமாக்கினார் அலினா தியோடொரால்டு என்ற பெண் இயக்குனர்.

படத்தின் முதல் காட்சியில் ஒரு பண்ணை வீடு தெரிகிறது. கிணற்றில் இருந்து நிலத்தில் விழும் நீரிலேயே படத்தின் பெயரும் வந்து விழுகிறது. பண்ணை வீட்டின் வேலியை ஒட்டிய காட்டில் தென்னமெரிக்க இளைஞன் ஒருவன் நெருப்பில் வாட்டி எதையோ சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான். அந்தப் பக்கமாக வரும் போலீஸ் வாகனத்தைக் கண்டு மறைகிறான். இதைப் பண்ணை வீட்டுப் பெண் பார்த்துவிட்டு, பையில் போட்ட உணவுப் பொட்டலம் ஒன்றை அவனுக்குப் பக்கத்தில் உள்ள மரக்கிளையில் மாட்டிவிட்டு ஓடிவிடுகிறாள். அவன் எடுத்துச் சாப்பிட்டுவிட்டு அவளுடன் பேசுகிறான். பிறகு இருவரும் குதிரைச் சவாரி செய்கிறார்கள். அவனைத்

www.tamilarangam.net

தன் வீட்டிற்கே அழைத்துவந்து அப்பாவுக்குத் தெரியாமல் பரணில் ஒளித்து வைக்கிறாள். அவனும் அவள் அப்பாவுக்குத் தெரியாமல் இருக்கிறான். ஒரு நாள் காலை அவள் ஆட்டுப் பால் கறந்து பரணிற்குச் செல்வதை அவள் தந்தை பார்க்கிறார். மறுகாட்சியல் போலீஸ் வேன் வருகிறது. அவன் அழைத்துச் செல்லப் படுகிறான். அவள் ஏதுவகையுமற்று நிற்கிறாள்.

சிறந்த முறையில் கதைசொன்ன விதம், கேமரா, மற்றும் இசைக்கு இந்திய மோர்சிங்iகையும், பெரு நாட்டுப் பலமூங்கில் கூட்டிசையையும் இணைத்துப் புதிய முறையில் பொருத்தி இருந்தனர். வசனமே இல்லாமல் 12 நிமிடத்தில் இச்சிறுகதை போன்ற வடிவத்தைப் படைத்தளித்த இயக்குனருக்குக் கைதட்டி ஆரவாரித்தனர் பார்வையாளர்கள்.

* * * * *

"Dunkle Schatten Der Angst" என்ற "Dark shadows of fear"


இயக்குனர் கான்ஸ்டான்டீன் ஸ்மிட் இஸ்தான்புல்லில் பிறந்த ஜேர்மனியர். இவர் 1980ம் ஆண்டு துருக்கியில் தான் அனுபவித்த கொடுமைகளையும், அந்தக் கொடுமைகளில் இருந்து விடுபட்டு ஜேர்மனியைப் புகலிடமாகத் தேடி வரும் ஒரு பெண்ணின் வாழ்க்கையைச் சித்தரிப்பதே இப்படம். முதல் காட்சியே இரவில் நடந்து செல்கிறார்கள் அகதிகள். வேனிலிருந்து இறங்கிய போலிஸ்காரர் "அஸ்ஸைலம்" என்கிறார். எல்லோரும் "ஆம்" என்கிறார்கள். எல்லோரையும் அழைத்துக் கொண்டுபோய் ஒரு காப்பி ஹோட்டலில் விட்டுவிட்டு வேன் போய்விடுகிறது.

அடுத்தநாள் அகதிகள் குடியுரிமை கோரும் மனுப்பெற, வரிசையில் நிற்கிறார்கள். அப்போது ஒரு பெண் மயக்கமுற்று விழுகிறாள். பக்கத்தில் இருந்த துருக்கியக் கிழவர் அவளைக் காப்பாற்றும்படி துருக்கிய மொழியில் கத்துகிறார். கிழவருக்குத் தற்காலிகமாகத் தங்குவதற்கு அகதிகளுக்குரிய டார்மெண்ட்ரி இருப்பிடம் கிடைக்கிறது.

கூடவே ஒரு மொழிபெயர்ப்பாளனை வைத்துக்கொண்டு அவளைத் தேடி அலைகிறார்.

பெண் டாக்டர் அத் துருக்கியப் பெண்ணுக்கு "Post traumatic shock" இருப்பதை உணர்ந்து அவளைக் குழந்தையைப் போலக் கையாள வேண்டும் என்கிறார். ஆனால் பணியாளர்களும் மருத்துவர்களும் அவளைக் கொடுமையாகவே நடத்துகின்றனர். பிறகு டாக்டரே பொறுப்பெடுத்து அவளைப் பேச வைக்க முயற்சி எடுக்கிறார். துருக்கியர்களை அழைத்துப் பேசவைக்கிறார். ஒன்றும் பயனில்லை. அவளுக்குத் தான் அனுபவித்த கொடுமைகளும் தன்னுடன் குழந்தையுடனிருந்த பெண் அனுபவித்த கொடுமைகளும் நினைவுக்கு வரவர வெளிறிப்போய்க் கத்துகிறாள். நனவோடை உத்தியில் அவளது முந்தைய வாழ்க்கையை இயக்குனர் வெற்றிகரமாகப் பார்வையாளர்களுக்குப் புரிய வைக்கிறார். இதற்கிடையில் கிழவருக்கு குடியுரிமை கிடைக்க வாய்ப்பில்லை எனத் தெரிகிறது. மொழிபெயர்ப்பாளன் இரண்டு வழிகள் இருக்கிறது; ஒன்று நீங்கள் மருத்துவமனையில் நீண்டகால நோயாளியாக சேர்ந்துவிடுவது, அல்லது, ஜேர்மனியப் பெண்ணை மணம் முடிப்பது என்கிறான். துருக்கியப் பெண்ணைக்

www.tamilarangam.net



கிழவர் கண்டுபிடித்துத் தனக்குத் தெரிந்த செய்திகளை டாக்டரிடம் கிழவர் சொல்கிறார். அதிர்ச்சி அடைந்த பெண்ணின் கண்களுக்கு எல்லோருமே கொலையாளிகளாய்த் தெரிகிறார்கள். தானாகவே குளியலறையில் தண்ணீரைத் திறந்துவிட்டு மூழ்கி இறந்து விடுகிறாள். இஸ்லாமிய முறைப்படி அடக்கம் செய்கிறார் டாக்டர். கிழவர் விடுவிடுவென்று நடந்து சென்றுவிடுகிறார்.

படத்தைக் கொண்டுசென்ற விதத்தையும், கிழவர், துருக்கிய நோயாளிப் பெண், டாக்டர் ஆகியோரின் நடிப்பு மூன்றும் சிறப்பாக இருந்ததுடன் பார்வையாளர்களின் மனத்தைச் சோகத்துடன் பிசைந்து எடுத்தது இந்தப் படம்.

* * * * *

அதேநாள் Horror of daybreak என்ற படத்தைப் பார்க்க முடிந்தது. எஸ்தர் க்ரோன்டேன் என்ற பெண் இயக்குனர் பத்துநிமிடக் குறும்படத்தில் தனது செய்தியைக் காண்பித்தார். சிறு கிராமத்தின் தெருவில் எல்லோரும் விருந்துக்குத் தயாராகின்றனர். அப்போது இரண்டு குழந்தைகள் வருகின்றனர். அவர்களை எடுத்து அணைத்துக் கொள்கிறாள் ஒருத்தி. திடீரென்று வானத்திலி இருந்து குண்டுமழை பொழிந்து சென்றுவிடுகிறது விமானம். எல்லோரும் ஓடிச்சென்று பதுங்குகின்றனர். பின்னர் வந்து விருந்து சாப்பிட்டுச் செல்கின்றனர். அடுத்த நாள் எழுந்து பார்க்கும்போது அனைவரும் ஒவ்வொரு மரத்தில் தூக்கில் தொங்குகின்றனர். இயக்குனரின் மொழி புரியவில்லை.

* * * * * *

North Stands என்ற முழுநீளத் திரைப்படம் கால்பந்தாட்டு விளையாட்டைச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுற்றி அமைக்கப்பட்டு இருந்தது. மேற்கு ஜேர்மனியின் குழுவின் அட்டகாசங்கள். இரு குழுவின் ஏஜென்டுகளின் கொள்ளை. பீர் கடையின் அரசியல், இதற்கிடையில் ஸ்கின்ஹெட்டுகளின் திருவிளையாடல்களைக் காண்பிக்கிறார். ஒரு துருக்கிய இளைஞன் முட்டையுடன் இரயிலுக்காகக் காத்திருப்பான், அவனை வீணாக வம்பளந்து அடித்து முட்டைகளை எல்லாம் சாப்பிட்டுவிட்டு, இளைஞனைப் பஸ்ஸில் அழைத்துச் சென்று எல்லா ஸ்கின்ஹெட்டுகளும் அடிக்கும் கொடுமையை அப்படியே இயல்பாகக் காண்பித்தார். படம் விறுவிறுப்பாகச் சென்றது.

* * * * * *

**Hunting Scene** என்ற ஆறு நிமிடப் படத்தை இயக்கிய நிகோல் விக்மேன் என்ற பெண் இயக்குனர் நாசுக்காக இனத்துவத்தை எடுத்திருந்தார்.

பெரிய வேலிக்குப் பின் அகதிகள் நின்றுகொண்டிருக்கிறார்கள். பெரிய வீட்டிலிருந்து வெளிவரும் பெண் காரை எடுக்கிறாள். அது ஸ்டார்ட் ஆகவில்லை. காரை எடுக்க முடியவில்லை என்கிறாள் அகதிகளைப் பார்த்து. பிறகு அவர்களைப் பார்த்துப் பயந்துவிட்டு வேகமாக நடக்கிறாள். அவர்களும் நடக்கிறார்கள். வேலிக்கு வெளியே வருகிறாள், பயத்துடன். அவர்கள் அவளை ஒன்றும் செய்யவில்லை. ஆனாலும் பயந்து வெளிப்போய் ஓடுகிறாள். படம் இவ்வளவுதான். இயக்குனர் படத்தைப் பற்றிக் கூறும்போது: முதலில் பெண் தன் தனிமையையும், எதிரில் உள்ளோரின் கூட்டத்தையும் பார்த்துப் பயப்பிடுகிறாள், தன் பயந்தாங்கொள்ளித் தனத்தால் வேலிக்கு வெளியில் இருக்கும் அகதிகளை-, வேலியை, அது - தேசிய எல்லை- யாகவும் நினைத்துக் கொள்ளலாம். இப்படம் ஜேர்மனிக்கு வெளியில் உள்ளவர்களைப் பற்றி ஜேர்மனியின் நிலை என்று கூறலாம் என்கிறார்.



www.tamilarangam.net

* * * * * *

அடுத்து இரண்டு ஆவணப் படங்கள் (Documentary) திரையிடப் பட்டன. ஒன்று Now it's boiling over மற்றது Faith, Charity, Hope.

முதல் படம் தாமஸ் ஹெய்சே என்ற புகழ்பெற்ற ஜேர்மனிய இயக்குனரால் இயக்கப் பட்டது. ஐந்து ஸ்கின்ஹெட்டுகளின் வாழ்க்கையையும், அவர்களிடம் நீண்ட பேட்டியையும் காட்டி ஜேர்மனிய இளைஞரின் இயல்பை வெளிக்காட்டுகிறார். படத்தில் இளம் நாஸிகள் தங்களின் எதிரிகள் என்று இடதுசாரிகள், வெளிநாட்டவர், ஜிப்ஸிகளைக் கூறுகிறார்கள். வலது இடது பாதையைத் தேர்வு செய்த தங்களின் வாழ்க்கையை விளக்குகிறார்கள். ஒரு இளைஞன் தான் இடதுசாரிகளிடம் இருந்து தற்காப்பிற்காக ஆயுதம் வைத்திருப்பதாகத் தெரிவிக்கிறான். சிலர் தாங்கள் வேலையற்று இருப்பதாகத் தெரிவிக்கிறார்கள். ஸ்கின்ஹெட்டுகள் தங்களின் இருப்பிடமாக, முன்பு யூதர்களைக் கொடுமைப் படுத்திய ஒரு முகாமைக் கைப்பற்றி அதில் வசிக்கிறார்கள். கேமரா அதுவரை போய் நின்றுவிடுகிறது.

அடுத்த படத்தில் இளைஞர்கள் வேலைக்குப் போய் வருகிறார்கள். மாலையில் டிஸ்கோவில் கலந்து கொள்கிறார்கள். நடு இரவில் வீடு திரும்பும்போது கடைகளை உடைப்பது; வீதிகளில் நின்றுகொண்டு நாஜி முறையில் "ஹெயில் ஹிட்லர்" என்று கத்துவது போன்றவற்றை அப்படியே எடுத்திருந்தார்.

வெளிநாட்டானைத் தாக்கியதற்காக சிறைசென்று வந்த ஸ்கின்ஹெட்டைக் காண்பிக்கிறார். தனது காதலியுடன் ஹிட்லரின் படத்துக்கு முன்னால் அமர்ந்துகொண்டு ஹிட்லரின் வெறித்தனமான பேச்சுகளை டேப்பில் போட்டுப் பொழுதைக் கழிப்பதைக் காண்பிக்கிறார்.

அடுத்த கட்சியில் ஸ்கின்ஹெட் கிட்டாரிஸ்ட் இளைஞனிடம் பேட்டி எடுக்கிறார். "வெளிநாட்டாரே வாருங்கள்; புகைகுழிக்குப் போங்கள்" என்கிறான். அதன் அர்த்தம் என்ன என்கிறார். பாடிய இளைஞன் அது வெறும் "ஜோக்" என்கிறான்.

"ஹிட்லரால் ஆறுமில்லியன் மக்கள் நச்சு வாயு அறைகளில் கொல்லப் பட்டார்கள் தெரியுமா?" என்கிறார். "சில ஆயிரமாக இருக்கலாம்" என்கிறான், ஆமாம் அது அறுபதாயிரம் என்கிறார். புகைபோட்டுக் கொன்றதற்கான ஆதாரங்கள் உள்ளன தெரியுமா? என்கிறார். அவன் சிரிக்கிறான். இந்தக் காட்சி ஏறக்குறைய பி.ஜே.பி. இளைஞனை ஒத்ததாக இருந்தது. பி.ஜே.பி. இளைஞனுக்கு இந்திய வரலாறு, பண்பாடு எல்லாம் தெரியாது. முஸ்லிம் ஒரு வெளிநாட்டவர் என்பதும் அவனை அடிக்க வேண்டும் என்று சொல்லும் அத்வானி ஆணை மட்டுமே அவனுக்குத் தெரிந்திருப்பது போலவே நாகரிகம் அடைந்துள்ள ஜேர்மனிய இளைஞனும் இருப்பது ஜேர்மனிக்கே ஒரு களங்கம்.

* * * * * *

கடைசியாகப் பார்த்த குறும்படம் Black rider. இப்படத்தை இயக்கியவர் பெப்பே டான்குவார்ட். படம் 12 நிமிடமே ஓடுகிறது. ஆனால் பார்த்தவர்கள் மனத்தில் வாழ்க்கை முழுவதும் ஓடும்!

நகரத்து பஸ்ஸில் ஒரு ஜேர்மனிய

www.tamilarangam.net



கிழவிக்குப் பக்கத்தில் ஒரு கறுப்பு இளைஞன் வந்து உட்காருகிறான். அவன் உட்காரும்போதே, அவன்மீது படாமல் தன்னை வேறு பக்கத்தில் இழுத்துக் கொள்கிறாள் கிழவி. பிறகு தனது அர்ச்சனையை ஆரம்பிக்கிறாள். கறுப்பர்கள் சுத்தம் இல்லாவர்கள்; அவர்களிடம் இருந்து பூண்டி நாற்றம் வரும்; இவர்களால்தான் எங்கள் இளைஞர்களுக்கு வேலை இல்லாமல் போகிறது என்று தொடர்ந்து கத்திக் கொண்டே வருகிறாள். இளைஞன் சிரித்துக்கொண்டு கேட்டுக்கொண்டே வருகிறான். டிக்கட் பரிசோதகர் வண்டியில் ஏறுகிறார். அவரிடம் காண்பிக்க டிக்கட்டை எடுக்கிறாள் கிழவி. உடன் அதை வாங்கி வாயில் போட்டு மென்று தின்றுவிட்டு அமைதியாக இருக்கிறான். பரிசோதகர் டிக்கட் எனும்போது தனது பாஸை (Pass) எடுத்துக் காண்பிக்கிறான். கிழவியிடம் டிக்கட் இல்லை. அவளை அழைத்துச் செல்கிறார் டிக்கட் பரிசோதகர்.

பார்த்த படங்களிலே சிரிப்பாகவும் அதே நேரம் கறுப்பு இளைஞனின் கோபமும், சாமர்த்தியமும் வெளிப்படும்படி எடுக்கப்பட்ட இப்படம், அரங்கையே குலுக்கியது சிரிப்பலையால்!

கடைசிநாள் கருத்தறிவிப்புக் கூட்டமும் நடைபெற்றது. எல்லாப் படங்களின் சாரமும், வெளிநாட்டவர் வருகையால் வேலை கிடைக்கவில்லை, ஆகவே வெளிநாட்டாரைத் தாக்குகிறோம் என்கிற வாதத்தைக் கண்டித்தன. இந்தப் போக்கு மீண்டும் ஹிட்லர் ஆட்சியைக் கொண்டுவர இருப்பதையும், ஜேர்மனியர்கள் - ஆரியர்கள் - உயர்ந்தவர்கள் - இனக்கலப்பு ஏற்படக் கூடாது - ஜேர்மனி

www.tamilarangam.net

ரத்தம் - போன்ற அறிவியல்ப் பூர்வமான நாஜிக் கொள்கைகள் மீண்டும் அரங்குக்கு வருவதையும்; இதை ஜேர்மனியர்களே எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறார்கள் என்ற கேள்விக்குறியையே எழுப்பியது.

சிலர் கிழக்கு ஜேர்மனி சேர்ந்ததால்தான் "இனவாதம்" தலைதூக்கியுள்ளதாக "முழுப்பூசணிக்காயை" மறைக்கப் பார்த்தார்கள். ஜேர்மனியில் பொருளாதார நெருக்கடியும் ஒரு காரணம். ஆனால் இன்று உலகம் முழுவதும் "கம்யூனிஸ பூதத்தை" ஒழித்துவிட்ட வெற்றிக் களிப்பில் முதலாளிகள் புதிதாகத் தங்களுக்கு எதிரிகள் என்று அறிவித்திருப்பது ஒன்று: முஸ்லிம்கள், மற்றது: வெளிநாட்டவர்கள்.

நாஜிகள் மீளுருவாக்கத்தை ஜேர்மனியத் தமிழர்களே விளக்க முடியும், விளக்குவார்களா?

# தமிழ் விளையாட்டுக் கழகக் கிண்ணம் 1995

**வ**ருடந்தோறும் நோர்வேத் தமிழ் விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்படும் ஐரோப்பா ரிதியிலான தமிழ் விளையாட்டுக் கழகக் கிண்ணத்திற்கான (T.S.C. CUP 95) ஏழு பேர்கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஆவணி 5,6ம் திகதிகளில் நடைபெற்றது. வைத்வெத் (veitvet) மைதானத்தில் நடைபெற்ற இச் சுற்றுப் போட்டியில் 12 கழகங்கள் பங்குபற்றின. அரை இறுதிப் போட்டியில் லெவண் ஸ்ரார்ஸ் (11 STARS) விளையாட்டுக்கழகமும் நோர்வேத் தமிழ் விளையாட்டுக் கழகமும் ப்ளூஸ் (BLUES) விளையாட்டுக் கழகமும் ஸ்ரவ்ணர் (STOVNER) விளையாட்டுக் கழகமும் பங்குபற்றின. இறுதிப் போட்டியில் நோ.த.வி.உம், ப்ளூஸ் (BLUES) வி.க.உம் மோதிக் கொண்டன. 3:1 என்ற கோல் அடிப்படையில் த.வி கழகம் வெற்றியீட்டிச் சுற்றுக் கிண்ணத்தை தட்டிக் கொண்டது. சுற்றுப் போட்டியில் 3வது இடத்தை ஸ்ரவ்ணர்.வி.க பெற்றது. இச்சுற்றுப் போட்டியில் அதிக கோல்கள் போட்டவருக்கான வெற்றிக் கிண்ணத்தை த.வி.க (T.S.C) யைச் சேர்ந்த தவராசா பெற்றார். சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான பரிசுக் கிண்ணத்தை இதே அணியைச் சேர்ந்த சுபாசங்கரும் சிறந்த பந்துகாப்பாளராக ப்ளூஸ் (BLUES) விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த உதயன் அவர்களும் பெற்றுக்கொண்டனர். இச்சுற்றுப் போட்டியில் பங்கு பற்றிய அனைத்துக் கழகங்களிற்கும் த.வி.க. (T.S.C) நினைவுக் கிண்ணம் வழங்கப்பட்டது.

வெற்றிக் கிண்ணங்களுடன் த.வி.க. (T.S.C) அணிவீரர்கள் (நிற்பவர்கள்) இ.வ: ரான்லி, சங்கர், தேவன், கேதீ, தவராசா, மகே, செல்வி, தவபாலன், சண் (இருப்பவர்கள்) இ.வ: பாபு, உருத்திரன், யூஜின், சாந்தன், மணி.

• வசந்தன்

www.tamilarangam.net

# சினிமாவின் நூற்றாண்டு

## மக்களுக்கான சினிமா

(மக்களுக்காகத் திரைப்படம் எடுத்தவர்களின் கருத்துக் கோவை. முதன்முதல் தமிழில் வருகிறது.)



பெர்ணாண்டோ சொலானஸ் மற்றுப் ஆக்டோவியோ கெட்டினோ (அர்ஜென்டைனா); கிளாபர் ரோச்சா (பிரேசில்); ஜார்ஜ் சான்ஜினேஸ் (பொலிவியா); மிகையில் லிட்டின் (சிலி); யூலியோ கார்ஸியா எஸ்பினோஸா (கியூபா); ஜோரிஸ் இவான்ஸ் (நெதர்லாந்து):





இல்மஸ் குணே (துருக்கி); அனந்த பட்டவர்த்தன் (இந்தியா) ஹெய்லி கரிமா (அமெரிக்கா)

இவர்களின் கருத்துகளைத் தமிழில் தந்திருப்பவர்கள்:

நெடுஞ்செழியன், கோச்சடை, அமரந்தா, தி.சு.சதாசிவம், சா.தேவதாஸ், சேந்தன், அஜ.கான், சுதா குமாரசாமி, மதன்மோகன்.

**பக்கம் 250. விலை 60ரூபா.**

**நூல் வேண்டுவோர் தொடர்புகொள்க:**
**தாமரைச்செல்வி பதிப்பகம்,**
**31/48 இராணி அண்ணா நகர்,**
**சென்னை 600078.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

● வயவைக் குமரன்

# இருவர்

முன்பு ஒரு காலத்தில் ரகுவல் லால் என்ற நாஸ்திகனும், இவோன் என்ற ஆஸ்திகனும், ஒரே ஊரில் வசித்து வந்தனர்.
பல ஆண்டுகளின் பின்னர், ஐரோப்பிய நாடொன்றின் அகதிகள் முகாமில், யுத் தங்களால் பிரிந்த இவ் இருவரும் எதிர் பாராத விதமாக சந்தித்தனர்.
" பார்த்தாயா, நீயும் உன் ஆண்டவனும்.., நானும், இன்னும் பலரும் இன்று அக திகள் ஆகிவிட்டோம். உன் ஆண்டவர் உன்னோடு இருந்திருந்தால் அவருக்கும் இந்தக் கதியா? " என்று இவோனைப் பார்த்து நளினம் செய்தார் ரகுவல்லால்.

இவோன் சினம் கொண்டார்.

" அப்போது நான் போலியான தெய் வங்களையும், மதங்களையும், விக்கிர கங்களையும் ஆராதித்தேன். குறுக்கு வழிகளில் அவை ஆண்டவனைத் தேடியிருந்தன. அவற்றின் பின்னால் வழிபட்டதால், எனக்கு இக்கதி. இப் பொழுது நான் மெய்யான கடவுளையும், நேரான பாதையையும் தெரிந்து கொண்டேன். இனி பயமில்லை. " என்று தனது இயலாமையை இவ்வாறு சமாளித் துக் கொண்டார் இவோன்.
சிறிது காலத்தின் பின், இவ் இருவரும் ஒரே கிராமத்தில் வாழும்படி நேர்ந்தது.

ரகுவல்லால் தானுண்டு, தன் வேலை உண்டு என்று வாழ்க்கையை ஓட்டினார். இவோனோ இராப் பகலாக அப் புகலிடக் கிராமத்தில் போதகம் செய்து ஒரு கூட்டத்தைத் திரட்டினார். 'சிலுவையின் வழி' என்ற சபையையும் தொடங்கினார். அந்த நாட்டு அரசுகளிடம் கைநிறையப் பணம் வாங்கி அந்தச் சபையையும் இயக்கி, **தானும்** போதகர்' என்ற ஸ்தா னம் ஒன்றையும் தானே அமைத்தும் கொண்டார். நீண்ட நெடிய உண்ணா நோன்புகளையும், உபவாசங்களையும், முறைப்படி செய்தும் வந்தார். தான் இறைவனின் நேசத்திற்குரிய சீடனா என்பதை அறிவதற்கு பல நாட்கள் தியானங்களையும் செய்து வந்தார். இறைவன் தன்னை ஏற்றுக் கொள்வதை புலப்படுத்தும் வகையில், அவர் தம் வார்த்தைகளை தனக்கு அளிக்க வேண்டுமென தினமும் வேண்டி நின்றார்.
ஆழ்ந்த தியானத்தில் இருந்த போதகர் இவோனுக்கு ஒருநாள் அசரிதி கேட்டது.

" பக்தனே! நீ தொளாயிரத்து தொன் னூற்றொன்பது புண்ணியங்களைச் செய்து, இறுதியாக எனது ஸ்தலத்திற்கு வரும் புண்ணியத்தையும் செய்வாயா னால், நானுனக்கு காட்சி தருவேன்." என்று அந்த அசரிதியில் சொல்லப் பட்டது.
போதகர் இவோன் மகிழ்ச்சியால் பொங்கி னார். தனக்குக் கிடைத்த தேவ வாக்கை ஊர்முழுக்கப் பரப்பினார். மீண்டும் சில கூட்டம் அவருடன் சேர்ந்தது. ஊர் முழுவதும் விழுந்து விழுந்து தொண் டுகள் செய்து புண்ணியம் தேடினார். ஒருநாள் நினையாப் பிரகாரமாய் ரகுவல்லாலை வீதியில் கண்டார். சுகம் விசாரித்தார். தனக்கு தேவதூது கிடைத் ததையும், தான் கடவுளை வெகு விரைவில் காண இருப்பதையும் ரகுவல் லாலிடம் கூறினார் இவோன்.

"கடவுளாவது, மண்ணாங்கட்டியாவது" என எடுத்தெறிந்து பேசினார் ரகுவல்லால்.

"உன்னிடம் சாத்தான் குடிகொண்டு விட்டது. நீ என் அழைப்பையேற்று வருவாயானால் நான் உன்னைக் குணப்படுத்துவேன்." எனக் கூறினார் போதகர் இவோன்.

"உங்களுக்குத்தான் பித்தம் தலைக்கேறி விட்டது. மூளை அழுக்குப் பிடித்து சக்காகிக் கிடக்கிறது. சீரான இந்த வாழ்க்கை நீரோடையில் நன்றாகச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சலவை செய்து வையுங்கள்.'' என்று சொன்னார், ரகுவல்லால்.

இவனோடு கதைத்துப் பிரயோசனமில்லை எனத் தனக்குள் முனுமுனுத்தபடி அகன்றார் இவோன்.

ஊர்முழுதும் தான் செய்து சேகரித்த புண்ணியங்களை எல்லாம், நாள் தவ றாமல் குறித்து வைப்பார் போதகர் இவோன். ஒருநாள் இரவு, தியானத்தின் பின் தனது நோட்டுப் புத்தகத்தை பிரித்து, படித்து, எத்தனை புண்ணியங்க ளைத் தான் செய்து விட்டதாகக் கணக்குப் போட்டுப் பாரத்தார் அவர். சுமார் எழுநூற்று ஐம்பது புண்ணியங்கள் தேறின. எப்படியும் மிகுதி இருநூற்று ஐம்பதையும் விரைவில் செய்து முடித்து விட வேண்டுமெனவும், எவ்வாறு எவ்வாறு புண்ணியங்களை இனி செய்து விடலாம் எனவும், கற்பனை பண்ணியவாறு தூங்கி விட்டாா அவர்.

ரகுவல்லாலுக்கு திருமணம் முடிந்து, இரண்டு பிள்ளைகளக்கு தகப்பனாகி விட்டார் அவர். சளைக்காமல் உழைப் பதிலும், சொந்தக் காலில் நிற்பதிலும், பிறரைச் சுரண்டாமல் வாழ்வதிலும் நின்மதியைக் கண்டார் ரகுவல்லால். அவரின் அன்பு மனைவி ரகுவல்லாலுக்கு ஊக்கமும், ஒத்தாசையும் நல்கி வாழ்ந்து வந்தாள். அவாகளின் வாழ்வில் நின்மதியும், சந்தோசமும் ஊற்றாகிச் சுரந்து வழிந்தன.

இவோன் புண்ணியங்களைத் தேடப் புறப்பட்டு வீதியில் இறங்கி நடந்தார்.
''போதகரே! இவ்விடத்தில் வாரும்.'' என அழைத்தாள் ஒரு பெண். போதகரும் அவ்விடத்தே வந்தார்.
சுமார் இருபது, இருபத்தைந்து மதிக்கத்தக்க செக்கச் செவேலென்று பெண்ணொருத்தி. தகதகத்த உடலோடு நின்றாள். அவள் கண்களில் ஏக்கம் நிறைந்திருந்தது.

''போதகரே, என்னிரு கைகளும் தீப்புண் களால் அவிந்துபோய் விட்டன. என் மேலங்கியை அவிழ்க்க நீங்கள் உதவு வீர்களா?'' எனக் கேட்டாள். அவள் கண்களில் இப்பொழுதும் ஏக்கம் நிறைந் திருந்தது. போதகர் இவோன் திகைப்பால் செய்வதறியாது நின்றார். பின், ஏற இறங்க ஒருதரம் அவளைப் பார்த்துவிட்டு ''ஓ மை ஜீஸ்சஸ்'' என்றவாறு அவளைக் கடந்து சென்றார்.
நல்ல காலம் இவளுக்கு உதவப்போய் என் புண்ணியங்களையெல்லாம் இழந் திருப்பேன். ஜீஸ்சஸ்தான் என்னைக் காப்பாற்றினார். எனத் தனக்குக் கூறிய வாறு நடந்தார். தீடீரென அவரின் மூளைக்கு ஒன்று தட்டுப்பட்டது. இவளுக்கு உதவ ஒருவரைத் தேடிக் கொடுத்தால், நான் ஒரு புண்ணியத்தை அடைய முடியுமா? எனத் தனக்குள் ஆயிரத்தெட்டுத் தடவை கோட்டுக் கொண்டே நடந்த இவோனுக்கு எதிரே தெய்வாதீனமாக கண்ணில் [illegible]பட்டார் ரகுவல்லால்.
''நில்லுங்கள், அன்பரே! எனக்கோர் உதவி செய்யமுடியுமா உங்களுக்கு? '' எனக் கேட்டார். ''நீங்கள் உதவுவதன் ஊடாக எனக்கோர் புண்ணியத்தைச் சோக்க முடியும். அதையிட்டு நான் மிகிழ்வேன்'' என்றார் போதகர்.
''அப்படியா!'' என வியந்தார் ரகுவல்லால்.

''இந்தத் தெருவின் கோடியில் ஒரு பெண் குடியிருக்கிறாள். அவள் கைகள் தீப்புண் களால் அவிந்துபோய் விட்டனவாம். அவள் ரவுக்கையை அவிழ்ப்பதற்கு என்னிடம் உதவினாள். நான் அதைச் செய்வது நல்லதல்ல.'' என்று ரகுவல் லாலைப் பாரத்தார் இவோன்.
''சரி, பார்க்கிறேன் நான்.'' என்றவாறு நடக்க முற்பட்ட ரகுவல்லாலிடம்
''எதற்கும் ஜாக்கிரதையாக இரு! காலம் கெட்டுக் கிடக்கிறது. அவள் கண்களிலும் ஏக்கம் நிறைந்து கிடக்கிறது. மேலும், பாவத்திற்குத் தூண்டிய செயலை எனக்குச்

சுமத்தாதே!'' என்று இடை மறித்தார் இவோன்.
''உம்..'' என்றவாறு அவ் வீட்டைநோக்கி நடந்தார் ரகுவல்லால்.
''ஆண்டவரே! ரகுவல்லால் பாவச் செயலில் விழுவானாகில், நீரே அவனைக் காப்பாற்றும்.'' என ஆண்டவன் மீது பழியைப் போட்டுவிட்டு நடையைத் தொடர்ந்தார் அவர்.

ரகுவல்லால் மேலாடையை அவிழ்த்துக் கொண்டிருந்த போது ''கையோடு மார்புக் கச்சையின் ஊக்குக்களையும் அகற்றி விடு!'' எனக் கேட்டுக் கொண்டாள் அவள். ரகுவல்லால் அவ்வாறே செய்தார். ''நல்லது, அந்த அறைக்குள் தொட்டிலில் கிடக்கின்றான் என் குழந்தை. அவனை எடுத்துவந்து என் மடியிலே போடு, அவன் பாலருந்தி வெகுநேரம் ஆகிவிட்டது.'' என்றாள் அவள். குழந்தையை மடியிலே கிடத்திவிட்டு, அவன் கன்னத்தில் செல்லமாகக் கிள்ளொன்றைப் போட்டுவிட்டு வெளியேறிய ரகுவல்லாலிடம், ''கடவுளாய் வந்து உதவினாய் என்று எண்ணிக் கொள்கிறேன்.'' என்றாள் அவள்.

போதகர் இவோன் தொளாயிரத்து தொன்னூற்று எட்டு புண்ணியங்களை இதுவரை சேகரித்து விட்டார். இன்னும் ஒன்றே ஒன்தான் பாக்கி. ஆனாலும் அது அவரால் முடியாமல் இருந்தது. நீண்ட நாட்களாகவே அவருக்கு ஒரு புண்ணியத்தைச் செய்து விடுவதற்கான வாய்ப்புக்கள் எதுவும் கிட்டவில்லை. பார்த்துப் பாத்துச் சலித்துவிட்டார். இறுதியாக ஒரு முடிவுக்கும் வந்தார். ஊர் மக்களிடம் சென்று அவர்கள் ஏதாவது விண்ணப்பங்களைக் கடவுளிடம் தருவதாக இருப்பின் அவற்றைப் பெற்று, கடவுளிடம் சமர்ப்பித்து ஒரு புண்ணியத்தை ஈடேற்றுவதென்றும், அத்துடன் தனது வழிப் பயணத்துக்கான செலவுகளை அவர்களிடமே சேகரித்து விட முடியுமெனவும் முடிவு செய்தார்.

ஊரூராக விண்ணப்பங்களைச் சேகரித்த இவோன் இறுதியாக ரகுவல்லாலின் வாசலில் வந்து நின்றார்.
''போதகர், அடியேனின் வாசல் வந்து நிற்பதா? '' ஆச்சரியத்தோடு கேட்டார் ரகுவல்லால்.
''நான் இறைவனைக் காண இருப்பதால் இறுதியாக உன்னிடம் வந்தேன். இது உனக்குக் கிடைக்கும் கடைசிச் சந்தர்ப்பம். நீ பழயவைகளை மறந்து, உன் சிந்தனைகளைக் களைந்து, இறைவனை ஏற்றுக் கொண்டு, அவரிடம் ஏதாவது விண்ணப்பம் செய்ய விரும்பினால் கூறு. நான் மூன்று நாட்களில் அவரின் சந்நிதியை அடைவேன். உனது விண்ணப்பங்களையும் நான் அவரிடம் சமர்ப்பிப்பேன். நிட்சயமாக அவர் உன்னை மன்னிப்பார்.'' என்று பிரசங்கம் செய்தார் இவோன்.

''என்னைத் தெந்தரவு செய்யாதே. என்னிடம் விண்ணப்பங்கள் அவருக்கென்று ஏதுமில்லை. இருப்பதை மனிதரிடத்தே சமர்ப்பிப்பேன். அவர்கள் செவி சாய்க்காதபோது மனிதனின் பெயரில் போரிடுவேன்.'' என்றார் ரகுவல்லால்.

''சரி, உன்னைத் திருத்த முடியாது. அகங்காரம் உன்னிடம் குடிகொண்டு விட்டது. ஆண்டவனின் நாள் நெருங்குகிறது. உன்னையும் அவர் நிட்சயம் மீட்பார்.'' எனக் கூறிய போதகர் ''கடைசியாக என் பயணத்திற்கு ஏதாவது உதவ விரும்புகின்றாயா?'' எனவும் கேட்டார்.

ரகுவல்லால் உள்ளே போய் இரண்டு சிறிய ஆணிகளையும், ஒரு பொடிடப்பாவையும் கொண்டுவந்து நீட்டினார். ''இவைளையே தர விரும்புகின்றேன். இதை விடவும் என் உழைப்பின் வெகுமதியை இதற்கு செலவழிக்க முடியாது'' எனக் கூறினார்.
என்னைப் பரிகாசம் செய்கிறாயா என்று கோபம் பொத்திக்கிட்டு வந்தது போத

www.tamilarangam.net

சுருக்கு. மறுகணமே அடக்கிக் கொண்டார். கோபப்படுவதால் புண்ணியங்களில் ஏதாவது குறைந்து விடுமோ எனப் பயந்துவிட்டார். பின், "வருகிறேன், கடவுளின் ஆசி உனக்குக் கிட்டட்டும்." என்றவாறே திரும்பினார்.

மறுநாள் மூட்டை முடுச்சுகளோடும், வழிப்பணத்தோடும், யாத்திரைக்குக் கிளம்பி விட்டார் இவோன். இரண்டு நாட்களாக குளிரிலும், மழைத்தூறலிலும், கால் பொசுங்கும் வெயிலிலும் நடந்தார். அன்றிரவு நாசு கனத்தது. விடாது தும்மியது. கிராமத்து வயித்தியருக்கு பணம் செலவழித்து, உடலைத் தேற்றி மீண்டும் நடக்க ஆரம்பித்தார். மூன்றாம் நாள் பயணத்தில் அவரின் பாத அணிகளின் கட்டை அறுந்துவிட்டது. பொசுக்கும் வெயிலில் அவரால் நடக்க முடியவில்லை. ஊருக்குள் நுர்ளைந்து அவற்றைச் சரிசெய்துவிட்டு, நடந்து நடந்து ஆண்டவனின் சந்நிதியை ஒருவாறு வந்தடைந்தார்.

"ஆண்டவரே, இதோ உம் அடியான்!" என்றவாறு முழந்தாழ் இட்டு பின், ஆழ்ந்து தியானித்தார். "ஆண்டவரே, என கண்முன் வாரும். உம்மைக் காண ஓடோடிவந்த அடியேனைப் பாரும்." என்றார் கண்களை இறுக மூடி.
"பக்தனே!"
திடுக்குற்றார் இவோன். பழகிய குரலாக இருந்தது ஆயினும் கண்களைத் திறக்காது மௌனமாகவே இருந்தார்.
"உன் கண்களைத் திறந்து பார்! இதோ உன் ஆண்டவன்." என்றார் கடவுள்.
இவோன் கண்களைத் திறந்து பார்த்தார். கண்முன்னே ரகுவல்லால்!
"ஐயோ ஆண்டவரே என்ன இது? ஏனிந்தப் பிசாசை என்முன் நிறுத்தினீர்? அட கடவுளே, இது என்ன சோதனை." எனக் கத்தினார் இவோன்.
"பதறாதே! பக்தா, நான்தான் கடவுள்." என்றார் ஆண்டவர்.

"ஆண்டவரே உம் வார்த்தைகளை விசுவசிக்கின்றேன். உந்த உடலையும், அதன் குரலையும் நான் வெறுக்கிறேன்." என்றார் இவோன்.

"நீ விக்கிரகங்களையும், தொழுவங்களையும் வழிபட விரும்பவில்லை. பிறகேன் என் உருவத்தையும், உடலையும் கண்டு கோபப்படுகிறாய்? உருவங்களை வெறுக்கும் நீ என்னை எந்த உருவத்தில் காண விரும்பினாய்? முட்டாள் மனிதனே! பொருளின்றி எதுவுமில்லை. நீ என் வார்த்தைகளை விசுவசித்தாய், ரகுவல்லாலோ என் போன்ற வாழ்க்கையை விசுவசித்தான். நான் கடவுளல்ல. யூதாதேய மக்களின் மீட்பர். அவர்களில் அசலான மனித குமாரன். அவர்களோடு ஒன்றாக சுவாசித்து வாழ்ந்தவன்.
நீ என்னிடம் ஓடோடி வந்தாய், ஜலதோசம் வந்ததல்லவா? ஒரு மூக்குப் பொடியைப் போட்டு தீர்க்க வேண்டியதை மக்களின் பணத்தில உன் உடலைத் தேற்றினாய். இரண்டு ஆணிகளை அடித்து, உன் காலணியைச் செப்பனிடத் தெரியாத சோம்பேறியே! ஊாப்பணத்தின் வெகுமதியை உன் காலில் போட்டுத் திரிவதற்கு உனக்கென்ன உரிமை இருக்கிறது? அந்தப் பொண் ணிடம் நீ நடந்தது சரிதானா? உடலுக்குத்தான் பெறுமதியைக் கொடுக்கிறது இந்த உலகம் - உயிருக்கல்ல என்பதை நீயேன் அறியவில்லை? நீ அந்தப் பெண்ணின் ஏக்கத்தை எவ்வளவு கீழ்நிலையில் நோக்கினாய். நீ மனிதனாக நடந்தாயா?" எனக் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டார், கோபமாகக் கடவுள்.

"ஆண்டவரே என்னைப் பொறும். ஆனாலும் ஒரு நாஸ்திகனின் உடலெடுப்பதை எவ்வாறு ஏற்க முடியும்? " என மன்றாட்டமாகக் கேட்டார் இவோன்.

"அவன் என்னைக் கடவுளாக ஏற்க மறுத்தான். மனிதனாகவே ஏற்றான். இந்த உடல் என்பது மனிதனுக்கே சொந்தம்.

www.tamilarangam.net

ஆகவே மனிதனின் உடலைத் தேடினேன் அது அவனுடையதாக இருந்தது. உனது உடலிலோ, உடலினுள்ளோ நான் வரும்படி நீ மனிதனாகவில்லை இன்னும்." என்றார் பதிலுக்குக் கடவுள்.

"எனக்குக் குளப்பமாக இருக்கிறது. அவ்வாறானால் கடவுள் என்பது பொய்யா ஆண்டவரே!" என்றார் உருக்கமாக இவோன்.

"நான் மனிதனாக வாழ்ந்தேன். என்னைச் சாகடித்தார்கள். அவ்வாறு வாழத் தகதியற்றோர் என்னைக் கடவுளாக் கினார்கள். மனிதன் எப்போதும் என்போல இருப்பான். அதனால் அவர்களுக்குக் கடவுள் வேண்டியதில்லை. எவன் அவ்வாறு இருக்க விரும்பவில்லையோ அவனுக்குக் கடவுள் வேண்டியதாகிறது. நான் மனிதன் அல்லாதோருக்கே கடவுளாகப் பாடம் புகட்டவேண்டி இருக் கிறதது." என்றார், **இறுதியாகக் கடவுள்.**

---

# கவிதைகள்: ஒக்டாவியோ பாz (Octavio Paz)
## தமிழில்: மணி

### உதயம்

குளிர்ந்த வேகமான கரங்கள்
இருளின் கட்டுக்களை
ஒவ்வொன்றாக அவிழ்க்கின்றன
என்கண்களை விழிக்கிறேன்
இன்னமும்
பழுதுபடாத ஒரு புண்ணின்
மத்தியில்
நான் வாழ்கிறேன்.

### இங்கே

இவ்வீதி வழி என் காலடிகள்
இன்னொரு வீதியில்
மீளொலிப்பன
அவ்வீதியில்
இவ்வீதிவழிச் செல்லும்
என் அடிகள் கேட்பன
இவ்வீதியில்

பனிப்புகார் மட்டுமே நிசமானது.

### முன்பின்னாக்கவல்லது

வெளியினுள்
நான்
என்னுள்
வெளி
எனக்கு வெளியே
வெளி
எனக்கு வெளியே
வெளியில்
நான்
எங்குமில்லை
உள்ளே
வெளி
வெளியே
எங்குமில்லை
நான்
வெளியில்
இத்தியாதி

க்டாவியோ பாZ மெக்சிகோ நாட்டவர். உலகின் வாழுங் கவிஞர்களில் முக்கியமான ஒருவர் எனக் கருதப் படுபவர். மெக்சிகோவின் தூதுவராக இந்தியாவிற் சிலகாலம் பணியாற்றியவர். மெக்சிகோ அரசின் அடக்குமுறையை எதிர்த்துப் பதவிவிலகியவர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

● செ.சஞ்சயன்

# புகைப்படக்கலை



சென்ற இதழ் தொடர்ச்சி

## Exposure ஒளிப்பதிவாக்கம்

ஒரு விம்பத்தை film இல் பதிவாக்கும் போது அவ் விம்பம் சரியான முறையில் பதிவு செய்யப்படுவதற்கு ஒளிபுகும் துவாரமும், ஒளிபுகு நேரமும், ஒளி கிரகிக்கும் தன்மையை அடிப்படையாகக் கொண்டு சரியான முறையில் கணிப்படப்படல் அவசியம். ஒளிபுகும் துவாரத்தையும், ஒளிபுகு நேரத்தையும் அளக்கும் கருவி Exposure metter என அழைக்கப்படும். அதிகமாக எல்லா camera க்களிலும் இக் கருவி பொருத்தப்பட்டிருக்கும்., இக் கருவியை அடிப்படையாகக் கொண்டு தற்யபோதைய camera க்களில் உள்ள Exposure program களை (ஒளி கணிப்பு முறைகளை) முக்கியமாக நான்கு விதமாகப் பிரிக்கலாம்.

| | | |
|---|---|---|
| **Manuell** | **M** | இதில் நாம் தான் ஒளிமானிக்கேற்ப ஒளிபுகு துவாரத்தையும், ஒளிபுகு நேரத்தையும் கணிக்க வேண்டும். |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | | |
|---|---|---|
| **Aperture priority** | **A** | இதில் நாம் ஒளிபுகு துவாரத்தை முடிவு செய்யுமிடத்து Camera இல் உள்ள கணணி சரியான ஒளிபுகு நேரத்தை தானாகவே முடிவு செய்து கொள்ளும் |
| **Shutter priority** | **S** | இதில் நாம் ஒளிபுகு நேரத்தை முடிவு செய்யுமிடத்து Camera இல் உள்ள கணணி சரியான ஒளிபுகு துவாரத்தை தானாகவே முடிவு செய்து கொள்ளும் |
| **Programe** | **P** | இதில் கணணி தானே ஒளிபுகு நேரத்தையும், ஒளிபுகு துவாரத்தையும் முடிவு செய்து கொள்ளும். |

1/30sec இல் இருந்து 1/15sec க்கு ஒளிபுகு நேரம் அதிகரிக்கும் போது 1/30 இல் உள்விட்ட ஒளியை விட இரு மடங்கு ஒளியை உள்விடும். இதே போன்று 1/250sec இல் இருந்து 1/125sec க்கு ஒளிபுகு நேரம் அதிகரிக்கும் போது 1/250 இல் உள்விட்ட ஒளியை விட இரு மடங்கு ஒளியை உள்விடும்.

இல 8 இல் இருந்து இல 4 ஆக ஒளிபுகு துவாரம் அதிகரிக்கும் போது இல 8 உள்விட்ட ஒளியை விட இரு மடங்கு ஒளியை உள்விடும். இதே போன்று இல 16 இருந்து இல 8 ஆக ஒளிபுகு துவாரம் அதிகரிக்கும் போது இல 16 இல் உள்விட்ட ஒளியை விட இரு மடங்கு ஒளியை உள்விடும்.

உதாரணமாக நாம் ஒரு விம்பத்தின் ஒளியை Exposure meeter (ஒளி கணிப்பு மானி ) பின் வருமாறு கணிக்கிறது எனக் கொள்வோம்.

| | |
|---|---|
| ஒளிபுகு நேரம் | 1/125 sec |
| ஒளிபுகு துவாரம் | 8.0 |

விம்பம் (படம்) சரியான முறையில் பதிவு செய்யப்பட எமக்கு மேற் கூறிய அளவு வெளிச்சம் வேண்டும். **அதே அளவு வெளிச்சத்தை நாம்**

| | |
|---|---|
| **ஒளிபுகு நேரம்** | **1/125 sec** |
| **ஒளிபுகு துவாரம்** | **8.0** |

**தவிர்ந்த வெறு சந்தர்ப்பங்களிலும் பெறலாம்.**

நாம் ஒரு படி ஒளிபுகு நேரத்தை கூட்டி அதாவது ஒளிபுகு நேரத்தை இரு மடங்காக அதிகரித்து (1/125 sec இல் இருந்து 1/60sec க்கு மாற்றி),



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒளிபுகு துவாரத்தை ஒரு படி குறைத்து (ஒளிபுகு துவாரத்தை சிறிதாக்கி) அதாவது ஒளிபுகு துவாரத்தை ½ வாசியாக (இலக்கம் 8 இல் இருந்து இலக்கம் 16 ற்கு மாற்றி) குறைக்குமிடத்தில் நாம் முன்பு பெற்ற அதே அளவு வெளிச்சத்தையே பெறுகிறோம்.

ஏன் எனில் ஒளிபுகு நேரம் ஒரு மடங்கு அதிகரிக்க, ஒளிபுகு துவாரம் ஒருமடங்கு குறைகின்றது. எனவே தான் நாம்

ஒளிபுகு நேரம் 1/125 sec
ஒளிபுகு துவாரம் 8.0
**என்னும் சந்தர்ப்பத்திலும்**

ஒளிபுகு நேரம் 1/60 sec
ஒளிபுகு துவாரம் 16
**என்னும் சந்தர்ப்பத்திலும் ஒரேஅளவு வெளிச்சத்தைப் பெறுகிறோம்.**

மேற் கூறிய தொடர்பை மிக அவதானமாக கவனித்தல் அவசியம்.

எனவே இன்னுமொரு உதாரணத்தைப் பார்ப்போம்.

உதாரணமாக நாம் ஒரு விம்பத்தின் ஒளியை Exposure meeter (ஒளி கணிப்பு மானி ) பின் வருமாறு கணிக்கிறது எனக் கொள்வோம்.

ஒளிபுகு நேரம் 1/60 sec
ஒளிபுகு துவாரம் 16

விம்பம் (படம்) சரியான முறையில் பதிவு செய்யப்பட எமக்கு மேற் கூறிய அளவு வெளிச்சம் வேண்டும்.அதே அளவு வெளிச்சத்தை நாம்

ஒளிபுகு நேரம் 1/60 sec
ஒளிபுகு துவாரம் 16

தவிர்ந்த வெறு சந்தர்ப்பங்களிலும் பெறலாம்.

நாம் இரு படி ஒளிபுகு நேரத்தை குறைத்து அதாவது ஒளிபுகு நேரத்தை நான்கு மடங்காக அதிகரித்து (1/60 sec இல் இருந்து 1/250sec க்கு மாற்றி), ஒளிபுகு துவாரத்தை இரு படி கூட்டி (ஒளிபுகு துவாரத்தை பெரிதாக்கி) அதாவது ஒளிபுகு துவாரத்தை 4 மடங்காக (இலக்கம் 16 இல் இருந்து இலக்கம் 4 ற்கு

www.tamilarangam.net

மாற்றி) அதிகரிக்குமிடத்தில் நாம் முன்பு பெற்ற அதே அளவு வெளிச்சத்தையே பெறுகிறோம்.
ஏன் எனில் ஒளிபுகு நேரம் 4 மடங்கு குறைய, ஒளிபுகு துவாரம் 4 மடங்கு அதிகரிக்கிறத. எனவே தான் நாம்

ஒளிபுகு நேரம் 1/60 sec
ஒளிபுகு துவாரம் 16

**என்னும் சந்தர்ப்பத்திலும்**

ஒளிபுகு நேரம் 1/250 sec
ஒளிபுகு துவாரம் 4

**என்னும் சந்தர்ப்பத்திலும் ஒரே அளவு வெளிச்சத்தைப் பெறுகிறோம்.**

ஆரம்பத்தில் இது விளங்குவதற்கு சிறிது கடினமாக இருக்கும். ஆனால் சிறிது ஆறுதலாக சிந்திப்பின் இது ஒரு பிரச்சனையே அல்ல.

ஒன்றை எந்தளவு கூட்டுகிறோமோ அதே அளவு மற்றையதை குறைக்க வேண்டும். ஆனால் இலக்கங்கள் குழப்பத்தை உண்டு பண்ணும். எனவே இலக்கங்களில் தெளிவாக இருத்தல் வேண்டும்.

**ஒளிபுகு நேரத்தை கூட்ட குறைந்த எண்களைப் பாவிக்க வேண்டும்.**
உதாரணம்: 1/250sec ஐ விட கூடிய நேரம் ஒளியை புகவிட **1/125sec, 1/60sec, 1/30sec, 1/15 sec...........** தொடக்கம் **bulb** வரையிலான எல்லா நேரங்களையும்
பாவிக்கலாம்.

**ஒளிபுகு நேரத்தை குறைக்க கூடிய எண்களைப் பாவிக்க வேண்டும்.**
உதாரணம்: 1/60sec ஐ விட குறைந்த நேரம் ஒளியை புகவிட **1/125sec, 1/250sec, 1/500 ...........**தொடக்கம் camrra இல் உள்ள கூடிய நேரம் வரையிலான எல்லா நேரங்களையும்பாவிக்கலாம்.

**ஒளிபுகு துவாரத்தை குறைக்க கூடிய எண்களைப் பாவிக்க வேண்டும்.**
உதாரணம்: 5,6 ஐ விட குறைந்த ஒளியை புகவிட **6.7, 8, 9.5, 11, 13, 16, 19, 22** ஆகிய எண்களைப் பாவிக்கலாம்.

**ஒளிபுகு துவாரத்தை கூட்ட குறைந்த எண்களைப் பாவிக்க வேண்டும்.**
உதாரணம்: 5,6 ஐ விட கூடிய ஒளியை புகவிட **4.0, 3.5, 2.8, 2.4, 2.0, 1.7, 1.5, 1.2** ஆகிய எண்களைப் பாவிக்கலாம்.

www.tamilarangam.net

## படம் எடுக்கும் போது கவனிக்க வேண்டியவை

1. 1/60 sec ஐ விட நேரம் கூடும் போது ( 1/30sec, 1/15sec, 1/8sec ...... bulb வரை) அவசியமாக camera stand பாவித்தல் வேண்டும். ஏன் எனில் எம்மையறியாமலே எம்மினால் ஏற்படுத்தப் படும் சிறிய (நடுக்கங்கள்) அசைவுகளினால் எடுக்கப்படும் படம் தெளிவில்லாமல் வர சந்தப்பம் உண்டு.

2. படம் எடுக்கும் பொத்தானை அமத்தும் பொழுது மூச்சு விடாமல் இருந்தால் எம்மையறியாமலே எம்மினால் ஏற்படுத்தப் படும் சிறிய (நடுக்கங்கள்) அசைவுகளைத் தடுக்கலாம்.

3. Camera இன் ஊடாக விம்பத்தை பார்க்கும் போது படம் எடுக்கப்படும் விடயம் தவிர்ந்த வேறு பல தேவையற்ற விடயங்களும் தென்படும். எனவே கமராவினுடாக விம்பத்தைப் பார்த்தவுடன் படத்தை எடுக்காமல் தேவையற்றவற்றை விலக்கி தேவையான பகுதியை மட்டும் படம் எடுப்பின் சிறப்பாம படங்களை எடுக்கலாம்.

4. சூரியனுக்கு நேர் எதிராக நின்று படம் எடுப்பின் எடுக்கப்படும் விம்பம் கறுப்பாகக் காணப்படும். ஏனவே இம் முறையை தவிர்தல் நன்று.

5. படம் எடுக்கும் போது Background ஐ கவனித்தல் அவசியம். Background சிறப்பாக அமையாவிடில் படம் சிறப்பாக அமையாது.

---

புகைப்படக்கலை இன்னும் எமது நாட்டைப் பொறுத்தவகையில் அது «ஒரு கலை» என்ற ஸ்தானத்தையோ அல்லது அங்கீகாரத்தையோ பெறவில்லை என்றே கூறவேண்டும். புகைப்படக்கலை «ஒரு தொழில்» என்ற ரீதியில் ஓரளவு வளர்ச்சியடைந்துள்ளது. பலரின் பொருளாதார நிலைமையும் இக் கலையில் அதிக ஈடுபாட்டைக் காட்ட இடம் கொடுக்காது. நம்மில் பலர் இக்கலையில் ஈடுபாடு கொண்டிருந்தாலும் அவ் ஆர்வத்தை வளர்க்க புகைப்படக்கலைக் கல்வியோ அல்லது தமிழில் புத்தகங்களோ இல்லை என்றே கூற வேண்டும்.
ஆனால் இன்று ஐரோப்பாவில் எமக்கு இக் கலையை வளர்த்துக் கொள்ள சிறப்பான வசதிகளும் சந்தர்ப்பங்களும் உள்ளன. புத்தகங்கள், மாத சஞ்சிகைகள், பாடசாலைகள், புகைப்படக்கலைச் சங்கங்கள் (Camera club) போன்றவற்றை உதாரணமாகக் கூறலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பின்வரும் சஞ்சிகைகள் சிறப்பான விடயங்களை உள்ளடக்கி மாதாந்தம் வெளிவருபவை.

| | |
|---|---|
| Photoanswers | - English |
| Photo | - English |
| Praktical photography | - Englash |
| Fotografi | - Norsk |
| Foto | - Swedish |

Camera club கள் நோர்வேயின் பல பாகங்களிலும் உண்டு. இவ்விடங்களில் ஏனைய கலைஞர்களுடன் தொடர்பு கொள்ள, அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள, புதியவற்றை கற்க, போட்டிகளில் பங்கு பற்ற வசதிகள் உண்டு. Oslo Kamera Klub இல் வண்ணப்படப் பிரிவு, கறுப்பு வெள்ளைப் படப் பிரிவு, Video பிரிவு என மூன்று பிரிவுகள் உண்டு. சிறந்த Dark room, Lighting, Video editing வசதிகள், புகைப்படக்கலை வகுப்புகள், கருத்தரங்குகள் என்பனவற்றிற்கான வசதிகளும் இங்குண்டு. நோர்வேயின் பல சிறந்த கலைஞர்கள் இச் சங்கத்தில் அங்கத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நோர்வேஜிய புகைப்படக் கலைஞர்கள் சங்கமாகிய Norsk Selskap For Fotografi (NAFF) உடன் தொடர்பு தோடர்பு கொண்டால் எங்கெங்கு Camera club கள் உண்டு என அறியலாம்.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

NSFF. Postboks 820. 5001 Bergen.
Tel. Priv: 55206217 (Knut Dalen).

எம்மிமையே இக் கலையை வளர்பதற்காக பயிற்சிவகுப்புகள், கருத்தரங்குகள், கண்காட்சிகள், போட்டிகள் போன்றவை ஏற்படுத்தப்பட்டால் புகைப்படக்கலை எம்மிடையே வளர்ச்சியடைய உதவும் என நம்புகிறேன். இவற்றிற்கு தமிழ் கலை கலாச்சார சங்கங்கள், பத்திரிகைகள், ஏனைய மலர்வெளியீட்டாளர்கள் போன்றவர்கள் முன்வரவேண்டும். ஐரோப்பாவில் வெளிவரும் மலர்கள், சஞ்சிகைகளில் (எல்லா விதமான) கலைகள் சம்பந்தமான கட்டுரைகள், கருத்துப் பரிமாற்றங்கள் போன்றவை இடம் பெறுவதில்லை அல்லது மிகக் குறைவான அளவிலேயே இடம் பெறுகின்றன என்றே கூறலாம்.புகைப்படக்கலைஞர்கள் புகைப்படக்கலை சம்பந்தமான கருத்துக்களை சுவடுகள் மூலமாகவோ அல்லது வேறு சஞ்சிகைகள் மூலமாகவோ பரிமாறிக் கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

• செய்வந்தி

# பாலஸ்தீனம் – ஒரு நீறுபூத்த நெருப்பு



முன் தொடர்

*அப்பாவியான பால தீன மக்களை கொன்று குவித்து அவர்களது இரத்தத்தின் மீது ஒரு யூத நாட்டை அமைக்கும் யூதர்களின் சதித்திட்டத்திற்கு இங்கிலாந்தும் பிரான்சும் பல்வேறு வழிகளில் ஒத்துழைப்பு நல்கின. இக்காலகட்டத்தில்த்தான் 1ம் உலகபோர் மூண்டது. இதில்யேர்மனி, துருக்கி என்பன ஓரணியாகவும் இங்கிலாந்து, பிரான்சு ஆகியன ஓரணியிலும் நின்று போர்புரிந்தன. யுத்தத்தின் ஆரம்பத்தில் இங்கிலாந்து பெரும் தோல்வியைத் தழுவியது. இதனால் புதிய வல்லரசாக வளர்ந்து வந்து கொண்டிருந்த அமெரிக்காவை எப்படியும் யுத்தத்தில் தொடர்புபடுத்த சதிச்செயலில் ஈடுபட்டது. யூதர்களின் தலைவனாயிருந்த வை மாண் (HAEM WIESMAN) இதற்காகத் தூது சென்றான். இதன் விளைவாக 1917 சித்திரை மாதத்தில் அமொக்கா நேசநாடுகள் சார்பாக இங்கிலாந்திற்கு ஆதரவாகப் போரால் குதித்தது. யூதர்கள் செய்த இவ்வுதவிக்கு நன்றிக்கடனாக இங்கிலாந்தின் வெளிவிவகார அமைச்சர் ஆதர் பல்போர் (AUTHUR BALFOUR) ஒரு அரச பிரகடனத்தை 02.11.1917 அன்று வெளியிட்டார். அதில் யூதர்களிற்கான தேசிய இருப்பிடம் ஒன்று பாலதீனத்தில் நிறுவப்படும் என இங்கிலாந்து அரசால் உறுதிமொழி வழங்கப்பட்டது. யூதர்களிற்கு ஆதரவாக செயலாற்றிக்கொண்டே பால தீனத்தை கைப்பற்றுவதற்கும் இங்கிலாந்து அரபுநாட்டு தலைவர்களுடன் ரகசிய பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது. துருக்கி ஒட்டோமான் பேரரசிற்கு எதிராக அரபுகள் போராடும் பட்சத்தில் பால தீனம் துருக்கியிடம் இருந்து விடுவிக்கப்படும் துருக்கியிடமிருந்து சுதந்திரம் கேட்டு போராடும் அரபுகளின் கோாக்கைக்கு இங்கிலாந்து ஆதரவளிக்கும் என அறிவித்தது. துருக்கிப் பேரரசின் 400 ஆண்டுகால அடிமை வாழ்வில் இருந்து விடுபடத் துடித்த அரபுநாடுகளிற்கு இங்கிலாந்தின் ஆதரவு துருக்கிக்கு எதிரான போராட்டதை வலுப்படுத்தவும் அதேசமயம் முதலாம் உலகப்போால் இங்கிலாந்தின் கை ஓங்கவும் வழிவகுத்தது.*

*இங்கிலாந்தின் இரட்டைவேடத்தையும் அதன்*

www.tamilarangam.net

காலணித்துவ வி தாப்பைமையப்படுத்திய இ ரேலிய குடியிருப்பு நோக்கத்தையும் புாந்து கொள்ளாத அரபுநாடுகள் உலகப்போால் இங்கிலாந்தை ஆதரித்துச் செயல்ப்பட்டன. இது தொடர்பாக மக்கள் கொப்பாக இருந்த குசைன் இங்கிலாந்தின் தூதுவராகட் பணியாற்றிய கென்றி மக்மோகனுக்கும்(Hentry mcmohan) இடையில் கடிதபாமாற்றங்கள் பல இடம்பெற்றன. இக்கடிதப் பாமாற்றத்தில் சில விடயங்களைகொப் குசைன் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்.

அரபுகளிற்கான சுதந்திரம் என்பது பால தீனத்தை உள்ளடக்கியது என்பதுடன் அரபுப் பிரதேசங்களிற்குாய எல்லை வடக்கே பேர்சியாவின் எல்லைவரையான 37வது அட்சரேகை உள்ளடங்கலாக கிழக்கே பேர்சியாவின் எல்லையான பா ரா வளைகுடா வரையும் தெற்கே ஏடன்(யேமன்) தவிர்ந்த இந்துமகாசமுத்திரம் வரையிலும் மேற்கே செங்கடல் உட்பட மேர்சினா வரையிலான மத்திய தரைக்கடல்ப்பகுதி வரையிலும் அரபுப்பிரதேசம் என கொப் வலியுறுத்தினார்.

1915ம் ஆண்டு அரபுத்தலைவர்கள் டம க நகால் ஒன்று கூடிய மகாநாட்டில் பிரகடனம் ஒன்றை வெளியிட்டனர். டம க ஒப்பந்தம் என்று அழைக்கப்பட்ட இவ்வொப்பந்தத்தில் ஆசியாவில் உள்ள அனைத்து அரபுநாடுகளிற்கும் சுதந்திரம் வேண்டுமென்றும் விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் இங்கிலாந்திற்கு முன்னுாமை வழங்கக்கூடிய பாதுகாப்பு ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுமென்றும் அதேசமயம் அன்னியர்களிற்கு விசேச சலுகைகள் வழங்கக்கூடிய சரணாகதிமுறையை கைவிட வேண்டுமென்றும் இவ்வொப்பந்தத்தில் கூறப்பட்டது.

ஒப்பந்தவிதிகளை முழுமையாக ஏற்றுக்கொண்ட துருக்கிக்கு எதிராக அரபுகள் போாடுவதை வலியுறுத்தியது. இங்கிலாந்திற்கு ஆதரவாக முதலாம் உலகப்போால் குதித்த அரபுகள் ஏடனைக் கைப்பற்றிச் செங்கடல், இந்துசமுத்திரம் ஆகியவற்றில் தடைகளை ஏற்படுத்தவேண்டுமென்ற யேர்மனியின் போர்த்தந்திரத்தை உடைத்தெறிந்தனர். பால தீனத்தைக் கைப்பற்ற அனுப்பப்பட்ட இங்கிலாந்துப் படைகளைத் தடுத்துநிறுத்தி போராடிய துருக்கிப்படைகளை எதிர்த்து அராபியப்படைகள் போாட்டன. யெனரல் முர்ரே என்பவர் இப்போா் பற்றிக்குறிப்பிடுகையில் இங்கிலாந்துக்கெதிராக பேராடிமடிந்த துருக்கியவீரர்களைவிட சகோதர அரபுகளிற்கு எதிராகப்போராடி மடிந்த துருக்கி வீரர்களே மிக அதிகம் என குறிப்பிட்டுள்ளார்.

யூதர்களிற்கு முழுமையான ஆதரவு வழங்கியும் அரபுநாடுகளிற்கு போலி வாக்குறுதி வழங்கியும் இரட்டைவேடமிட்ட இங்கிலாந்து மறுபுறம் மற்றொரு சதிவேலையிலும் ஈடுபட்டது. யுத்தத்தின் பின்னான அரபுநாடுகளின் எதிர்காலம் குறித்து இங்கிலாந்து, பிரான்சு, ர யா என்பன கூட்டாக சதிஆலோசனைகள் நடாத்தி வந்தன. இப்பேச்சுவார்த்தை முடிவில் துருக்கிய ஒட்டோமான் பேரரசின் பகுதிகளை எவ்வாறு பகிர்ந்து கொள்வது தொடர்பாக 16.05.1916ல் ஒரு இரகசிய உடன்பாடுகாணப்பட்டது. இதன்படி விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் சவுதிஅரேபியா, யேமன் பாலைவனப்பகுதிகள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களை இங்கிலாந்து, பிரான்சு என்பன பங்குபோட்டு கொண்டன. அரபுகளைச் சமாதானப்படுத்துவதற்காக ஒரு சில பிரதேசங்களை சர்வதேச நிர்வாகத்தின் கீழ் விடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இங்கிலாந்து அரசு தங்களிற்கு மோசடி செய்துவிட்டதென்பதை காலம் தாமதித்தே அரபுகள் உணரத்தொடங்கினர் இதற்குச் சான்றாக 1917ல் ர யாவில் ஏற்பட்ட கம்யூனிசப் புரட்சியைத் தொடர்ந்து பதவிக்கு வந்த லெனின் ஏகாதிபத்தியவாதிகளின் சதிகளையும் இரகசிய ஒப்பந்தங்களையும் அம்பலப்படுத்தத் தொடங்கிய பின்னரே அரபுநாட்டுத் தலைவர்கள் கனவுலகில் இருந்து மீண்டனர்.

தொடரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுப்ரபாரதிமணியனின் இரு கவிதைகள்



யானைகளின் பிளிறல்
மயில்களின் நடனம்போல் அவ்வப்போது
இருளும், தனிமையும்
எனக்கென்ற ஏகாந்தமாய்
எத்திசைப் பார்வைக்கும்
தடையற்றதாய் கட்டிடங்களற்று
என் வீடு மட்டும்.
நீண்ட ஓவியத்தின் மூலைஓர மரம்
போல சிலரின் நடமாட்டம்
கடலின் இரைச்சல்
காதுகளுக்குள் எப்போதைக்குமாய்
சலசலத்து மரங்கள் அனுப்பும் காற்று
உடலைத் தடவியபடி எப்போதும்
காடு அருகிலான என் வீடு
கற்பனையில் இப்படித்தான் இருந்தது.
யானையின் பிளிறல்
செங்கற்களாய் அடைபட்டுவிட்டது.
இருளும், தனிமையும்
என் அறைக்கென்றாகி,
தடையற்றதாய் கட்டிடங்கள்
ஆட்களின் நடமாட்டம்
பஸ் இரைச்சல் போல்,
மயிலின் நடனமும்
கடலின் சலசலப்பும்
அஸ்திவாரத்துள் அமுங்கி
கட்டப்பட்டதாய் வீடு
என்பது மட்டும் தெரிந்துபோயிற்று.

என் விழிப்பிற்கா
சேவல் நகரத்தில் இல்லை
எல்லாம் சமையலாகிவிட்டன.
இல்லையெனில் வெள்ளைக் கோலம் பூண்டவை.
தப்தப்பென்ற துணிதுவைக்கும் ஒலி
சரியாக என்னை எழுப்பிவிட்டுவிடுகிறது.
விடியற்காலை விழிப்பு
நகரமனிதனுக்கு அவசியமில்லையென்றாலும்
பனியன் கம்பனியின்
ஏழரைமணி ஷிப்டிற்கு
தப்தப்பென்ற சத்தத்தில் அவசரம்
(இரவுகளில் இந்த தப்தப்
காலம் தவறிகூட கேட்கும்)
அந்த பெண்ணின் முகத்தை
பார்த்துவிட எத்தனித்ததுண்டு.
கடும் இருட்டு / குளிர்

நிசப்தமில்லாத நடமாட்டம்
பயமுறுத்த
விழிப்பு வந்தாலும் ஓடிப்போ
பார்க்க முடிந்ததில்லை
சேவலின் கூவலுக்கோ
அலாரத்தின் இடிக்கோ
ஒப்புமையானதல்ல அந்த தப்தப்.
அந்த சப்தத்தில்
அழுகையைக் கூட்டின உரத்தல்தான்
அதற்கப்புறம் தூங்கவிடாமல்
செய்துவிடுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்